தமிழ் வாழ்க!

துணர் ௩௫. மலர் ௩.

தமிழ்ப் பொழில்

CONNEMARA PUBLIC LIBRARY
2 - JUL 1959
MADRAS

விகாரி - ஆனி

1959

கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

தொண்டு தமிழ் முன்னேற்றம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

பொழிற்றொண்டர்:

ச. சுயம்பிரகாசம், B. A., B. L.,

தமிழ்ப் பொழில்.

பதிப்பாசிரியர் குழு.

1. திரு. ச. சுயம்பிரகாசம், B. A., B. L., தலைவர்,
கரந்தைத் தமிழ்ச் சங்கம்; பொழிற்றொண்டர்.

2. திரு. நீ. கந்தசாமி பிள்ளை, பள்ளியகரம், தஞ்சாவூர்.

3. பேராசிரியர் தி. வை. சதாசிவ பண்டாரத்தார்,
ஆராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

4. சித்தாந்த கலாநிதி ஔவை. சு. துரைசாமி பிள்ளை,
பேராசிரியர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

5. வித்துவான், க. வெள்ளைவாரணனர்,
ஆராய்ச்சித்துறை, அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

6. திரு. சி. வேதாசலம், B. A., B. L.,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம்.

7. திரு. வித்துவான் ச. பாலசுந்தரம்,
கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

உள்ளுறை

துணர் ௨௫ மலர் ௩

பக்கம்

1. வக்காணம்
சங்கீதம் ப. சுந்தரேசன் 65

2. தமிழகத்தில் பெண் உரிமை
சாமி. சிதம்பரனுர் 68

3. இலியத்
விரிஞ்சை மு. பழநி, எம். ஏ. 76

4, தமிழில் தாவரம்—
ஆம்பல்; செங்கழுநீர்
கு. சீநிவாசன், M. SC., 79

5. மணிமேகலையில் முரண்பட்ட செய்தியா?
மயிலை. சீனி. வேங்கடசாமி 85

6. சிற்றிலக்கியம்: 1. காதல்
மது. ச. விமலானந்தம், எம். ஏ., 92

தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௩௫	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰ விகாரி, ஆனி 1959 ஜூன், ஜூலை.	மலர் ௩

JUL 1959

* வக்காணம்.

(சங்கீத வித்துவான் ப. சுந்தரேசன், குடந்தை.)

நம் தமிழ் மொழியின்கண் விளங்கும் மிக்க பழைமை பொருந்தியதும் தூய்மையானதுமான பல்வேறு சொற்கள் யாவுமே, பொது முறையில் தமிழ்ச் சொற்கள் எனும் பெயர் பெற்றிருப்பதோடு, முத்தமிழ்ப் (இயல்—இசை—நாடகம்) பகுதிகள் ஒவ்வொன்றிற்கும் உரிய தனிச் சொற்களாகவும், அவ்வப்பகுதிகளுக்குரிய தனித்த நுண்மையான பொருளினை மட்டுமே தந்து ஆங்காங்கு நின்று விளங்குவதாகவும் அமைந்து கிடக்கின்றன.

அம்முறையில் வக்காணம் எனுமிச்சொல், நமது சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில், ஆடல்-பாடல்-அழகு இம் மூன்றனுள் ஒன்றினும் குறைவுபடாதவளாகிய மாதவி, அரங்கிற் புகுந்து ஆடுகின்ற இயல்பு கூறுமிடத்து, இளங்கோ வேந்தரால்,

> "அந்தரக் கொட்டுடன் அடங்கிய பின்னர்
> மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
> பாற்பட நின்ற பாலைப் பண்மேல்"

எனக்கூறிக் கைக்கொள்ளப் பெற்றதாகும். சிலப்பதிகாரத்தினை இக்காலம் நன்கு ஊன்றி வாய்விட்டுப் படித்துப் பழகுவாரையல்லாது ஏனைய புலவர்கள் நாவில் இவ் வக்காணம் என்ற சொல் அத்துணை எளிதாக வருவதற்கில்லை யெனவும் கூறலாம்.

இனி, இச் சொல்லினைப் பற்றிய குறிப்புகளைக் கூடியவரை முறையே எழுதி விளக்குவோம்.

இச்சொல்லின் பொருளாக வரும் பகுதி, சிலப்பதிகாரம் முதற் பதிப்பின் இறுதியில் தனித்து அச்சிட்டு சேர்க்கப்பட்டிருக்கும் அரும் பதவுரையில்,

"மீத்திறம்......வக்காணை வகுத்துப் பாற்பட நின்ற பாலைப் பண் மேலென்றது—மங்கலப் பண்ணாய் நரப்படைவு முடைத்தா யிருக்கிற பாலைப்பண்ணை அளவு கெடாதபடி ஆளத்தியிலே வைத்து அதன் மேலே யென்றவாறு" எனக் குறிக்கப்பட்டுளது.

* திருத்தம்: சென்ற சித்திரை இதழில் "குரல் வீணை" என்ற கட்டுரையிற் பக்கம் 19, வரி 9க்குப்பின், பக்கம் 20, 6முதல் 26வரி முடியவுள்ள பகுதியைச் செருக.

இப்பகுதியால், அரும்பதவுரைகாரர் கொண்ட பாடம் "வக்காணே வகுத்து" என நன்கறியக் கிடக்கின்றது. அதாவது வக்காணம் என்ற சொல் வக்காணே எனவும் வழங்கியதாக அறியலாம். தமிழ்ச் சொற்களிற் பல, அம் விகுதி பெற்று வரும் சொற்கள், ஐ விகுதி பெற்று வருவதும் மரபு வழுவாத நீர்மையதாய் இருத்தல் கூடும்.

இப்பகுதியினையே, சிலப்பதிகாரம் ஆறும் பதிப்பில், "மீத்திறம் ......பாலைப் பண் மேலென்றது—மங்கலப்பண்ணாய் நரப்படைவு முடைத்தாயிருக்கிற பாலைப்பண்ணை அளவு கெடாதபடி ஆளத்தியிலே வைத்து அதன் மேலே யென்றவாறு" எனப்பதிப்பித்து விட்டமை யினாலே, வக்காணே வகுத்து எனும் சொற்கள் புள்ளியிட்டுக் காட்டிய முறையால் மறைந்தே ஒழிந்தன.

முதற் பதிப்பில், ஐயரவர்கள் படாமை என்ற ஒரு சொல்லிற்கு மட்டுமே புள்ளி நிறைவு செய்து பதிப்பித்துள்ளார். அன்றி, ஏட்டுச் சுவடிகளிலும் அவ்வாறே இருந்திருக்கக் கூடும்.

ஆறும் பதிப்பாக அதே சிலப்பதிகாரத்தினை வெளியிட்டவர்கள் யாது கருதியோ, படாமை வக்காணே வகுத்து எனும் இம்மூன்று சொற்களையும் விலக்கி அவை இருக்கவேண்டிய இடத்தே புள்ளிகள் இட்டு நிறைவு செய்து பதிப்பித்து விட்டனர்.

இனி, இப்பகுதிக்கு அடியார்க்கு நல்லார் கூறிய உரைப்பகுதி யினையும் காணுவாம். அவை வருமாறு—

"மீத்திறம் படாமை வக்காணம் வகுத்துப்
பாற்பட நின்ற பாலைப்பண் மேலென்பது—
மங்கலப் பண்ணாய் நரப்படைவு முடைத்தா
யிருக்கின்ற பாலைப்பண்ணை அளவு கோடாதபடி
ஆளத்தியிலே வைத்து அதன்மேலே யென்க" என்பதாம்.

இஃதும் முதற்பதிப்பில் உள்ளதே. இப்பகுதியினையும் ஆறும் பதிப்பில் மீத்திறம் பாடாமை என மட்டுமே பதிப்பித்து ஏனைய வற்றை (வக்காணம் வகுத்துப் பாற்பட நின்ற பாலைப்) விடுத்து அச்சொற்கள் இருக்குமிடத்தில் புள்ளியிட்டு "பண் மேலென்றது" என்ற சொல்லை மட்டும் பதிப்பித்து விட்டனர். இவற்றிற்கெல்லாம் நாம் காரணம் யாதெனக் கவல வேண்டுவதில்லை. ஆயினும் ஒன்று மட்டும் கூறலாம். நம் பழந்தமிழ் நூல்கள், பதிப்புக்குப் பதிப்பு மாறுபட்டு விடுமாயின் பற்பல தூய தமிழ்ச்சொற்கள் இக்காலத் தமிழ் மக்களுக்குப் பெரும்பாலும் அறவே அறியமுடியாதநிலை வந் தெய்தினும் வியப்பெய்துவதற்கில்லை. கற்றறிந்த புலவர்களும் நாளடைவில் ஒவ்வொன்ருக மறந்துவிடவுங் கூடும். நிற்க,

இப்பகுதிக்கு ("மீத்திறம் படாமை வக்காணம் வகுத்து") உரை வகுத்த இரு பேராசிரியர்களின் உரை வளத்தால், வக்காணம்

எனும் சொல் வக்காணே என வழங்கி வருவது வழக்கெனவும், மேலும் அளவு கெடாதபடி எனும் அரும்பத வுரைகாரர் கூறியதைக் காட்டிலும் அளவு கோடாதபடி என அடியார்க்கு நல்லார் கூறி யிருப்பது, மிக்க ஆழமும் பொருட் செறிவும் உடையதான உரை யாகத் திகழ்கின்ற நலமும் நன்கு அறிந்துணரக் கிடக்கின்றது

இதுகாறும் கூறியவாற்ருல் "மீத்திறம் படாமை வக்காணம் வகுத்து" என்ற பழந்தமிழ்ச் சொற்ருெடர், அளவு கோடாதபடி ஆளத்தியிலே வைத்து எனப் பொருள் படுவதனை நன்கு ஓர்ந்து உணர்வோமாக.

சிலப்பதிகார மூலத்தில் வக்காணம், வக்காணே எனப் பாட மாறுபாடாகவும் இருந்தமையினுலே அரும்பத வுரைகாரர் வக்காணே எனவே பாடங் கொண்டதும் புலனுகின்றது. இச்சொல் நமது தெய்வச் சேக்கிழார் காலம் வரையிலும் நம் தமிழகத்திலேயே இசைத் தமிழ்ப் பகுதிகளில் நிரம்ப வழக்கில் இருந்து வந்துளது எனவும் கூறலாம்.

ஆனயர் வரலாறு கூறும் சேக்கிழார், குழற்கருவியில் வாய்வைத் தூதும் ஆனயர் ஆளத்தி செய்த முறைமையை,

"முத்திரையே முதலனைத்து முறைத்தானஞ் சோதித்து
வைத்ததுளை யாராய்ச்சி வக்கரனை வழிபோக்கி
யொத்தநிலை யுணர்ந்தாற்பின் ஒன்றுமுதல் படிமுறையா
மத்தகைமை யாரோசை யமரோசை களினமைத்தார்"

எனக் கூறினுர். இச்செய்யுட் பாகத்தில் வந்த வக்கரனே என்ற சொல், பண்டைய வக்காணே எனும் சொல்லின் சிதைவேயாகும். அதாவது, ஏடுகளில் வக்காணம் வக்காணேயாகிப் பொருள் மாறு பாடுருமல் நாளடைவில் முச்சுழி ணேகாரம் இருசுழி னேகாரமாகி வக்கானே என்ருகி, பின்னும் நெடிலெழுத்தான கா வின் காலும் (ா) வர வர இடையின ர கரமாகி வக்கரனே எனச் சிதைவு பெற்ற தெனக் கொள்ளலாம். இவ்வாருன மாறுபாடுகள் யாவும் பிற் காலத்தில் சொற்பொருளும் கலைப் பயிற்சியும் இல்லாதவர்களது சீரிய தொண்டினுல் ஏற்பட்டவையேயாகும். ஆக, பழந்தமிழ் வழக்கு மட்டும் மாறுபடாத நிலையில், அதாவது பொருள் மாறுபடாத் நிலையில் நிலைத்து நிற்பதே இக்காலத்திய நம்மவர் பெற்ற பெரும் பேருகும்.

இதுவரை பண்டைய உரையாசிரியர்களின் உரைப் பகுதியினுல் உணரப்பெற்றது, வக்காணம் என்பது ஆளத்தி என்பதேயாம். இவ் வாளத்தியும் 'வகுத்து' எனக் கூறப்படுவதால் பல்வேறு முறை யில் வகுக்கப்பெற வேண்டும். ஆளத்தி எனப்படுவது, இசைகளை ஆளும் முறையை, அதாவது, தொழில் செய்யுமுறையை அத்தி வருவது எனப்படும். இம் முறைகள் ஒவ்வொன்றும் தனித் தனிக் கட்டுரையாக நம் 'பொழில்' வாயிலாக எழுதி வருவோம்.

தமிழகத்தில் பெண் உரிமை.

சாமி. சிதம்பரனர்.

"பழந்தமிழ் நாட்டில் பெண்களுக்கும் ஆண்களைப்போலச் சம உரிமை யிருந்தது; பிற்காலத்தில்தான் அந்த உரிமைக்கு அழிவு வந்தது; ஆண்கள் பெண்களின் உரிமையைப் பறித்தனர்; அவர்களை அடிமைகளாக்கினர்; வீட்டுக்குள் அடைத்து வைத்தனர்" என்று கூறுவோர் உண்டு.

"இது உண்மையன்று; பெண்களுக்கு எந்தக்காலத்திலும் ஆண்களைப்போன்ற சம உரிமை யிருந்ததில்லை; பெண்களின் உடலமைப்பு ஆண்களின் உடலமைப்பைவிட மெலிவானது; ஆதலால் பெண்கள் ஆண்களோடு சமமாக எந்தக்காலத்திலும் இருந்ததில்லை; அவர்கள் ஆண்களின் பாதுகாப்பில்தான் வாழ்ந்து வந்தனர்; பிற்காலத்தில்தான் பெண்களுக்கு ஓரளவு உரிமை ஏற்பட்டது" என்று கூறுவோரும் உண்டு.

இந்த இரண்டு கொள்கைகளிலும் உண்மையுண்டு. இரண்டில் எது உண்மை, எது பொய் என்று சொல்லமுடியாது.

பண்டைத் தமிழகத்து மக்களுக்குள் பல பிரிவுகள் இருந்தன. அவைகள் பிறப்பினுல் உண்டான பிரிவுகள் அல்ல; நாகரிகத்தால்—அறிவால்—செல்வத்தால் ஏற்பட்ட பிரிவுகள்தாம். அப்பிரிவுகளை இரண்டு வகையிலே அடக்கிவிடலாம்.

(1) நல்ல நீர்வளம் உள்ள நிலப்பகுதியிலே வாழ்ந்த மக்களின் பிரிவு ஒன்று. (2) வளமற்ற நிலப்பகுதியிலே வாழ்ந்த மக்களின் பிரிவு ஒன்று.

நீர்வளமுள்ள இடத்திலே—ஆற்றங்கரைகளிலே—மருதநிலத்திலே—வாழ்ந்தமக்களிடம் நாகரிகம் குடிகொண்டிருந்தது. அவர்கள் உழவுத்தொழிலின் உயர்வை உணர்ந்திருந்தனர்; நல்ல அரசியல் முறைகளை அறிந்திருந்தனர்; பலவகைத் தொழில்களையும் செய்து வந்தனர்; நல்ல ஒழுக்கமும், கட்டுப்பாடும் உள்ள சமுதாயமாக வாழ்ந்தனர். இந்த மக்கள் உயர்ந்த இனத்தினராகக் கருதப்பட்டனர். இந்த உயர்ந்த இன மக்களுக்குள் ஆண்களே சிறந்தவர்களாகக் கருதப்பட்டனர். பெண்கள் ஆண்களுக்கு அடங்கி நடப்பதே நீதி—கற்பு—இல்லறதர்மம்—என்று கருதப்பட்டது. இந்த உயர்ந்த—நாகரிகம் அடைந்த—சமுதாயத்தில் ஆண்களுக்குள்ள உரிமை பெண்களுக்கு இல்லை.

இந்த நாகரிகம் நிறைந்த நிலப்பகுதியிலேயே, நிலஉரிமை படைத்தவர்களுக்கு அடங்கி நடக்கும் மக்கள் இருந்தனர். நிலவுரிமையுள்ளவர்கள் இடும் ஏவலைச் செய்து வாழும் மக்கள் இருந்தனர். இம்மக்களுக்குள், ஆண்-பெண் உரிமை ஒன்ருகத்தான் இருந்தது. ஆண்-பெண் அனைவரும் பாகுபாடின்றி நிலத்திலே வேலை செய்வார்கள்; இருவரும் எங்கும் தாராளமாகச் செல்வார்கள்.

மலைநிலமாகிய குறிஞ்சி நிலம், கடற்கரைப் பகுதியாகிய நெய்தல் நிலம், காட்டுப் பகுதியாகிய முல்லை நிலம், வறண்ட பகுதியாகிய பாலைநிலம் ஆகிய நிலப்பகுதிகளிலே வாழ்ந்த மக்களிடம் ஆண்–பெண் வாழ்வு சமத்துவமாகத்தான் இருந்ததென்று தெரிகின்றது. குறவர்கள் வேட்டையாடப் போவதுபோலக் குறத்திகள் குறி சொல்லுவதற்கும், மலைபடு திரவியங்களை விற்பதற்கும் புறப்பட்டு விடுவார்கள். மீனவர்கள் மீன் பிடிக்கச்செல்லுவார்கள்; மீனவப் பெண்கள் மீன்களைக் கொண்டுபோய் விற்பனைசெய்து வேறு பண்டங்களை வாங்கிக்கொண்டு வருவார்கள். முல்லைநில ஆயர்கள் மாடு, ஆடுகளைப் பாதுகாப்பார்கள்; ஆய்ச்சியர்கள் தயிர், பால், வெண்ணெய் முதலியவற்றை வேறு நிலங்களுக்குக் கொண்டுபோய் விற்பனை செய்து வருவார்கள்.

இந்த உண்மைகளைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலே காணலாம்.

ஆகவே, பெண்களை அடிமையாக அடக்கி ஆளும் வழக்கம் நாகரிகம் பெற்ற உயர்ந்த சமுதாயத்தில்தான் தொடங்கிற்று என்பதில் ஐயம் இல்லை. நல்லவைகளோ, கெட்டவைகளோ—உயர்ந்த சமுதாயத்தினரால் பின்பற்றப்படும் பழக்க வழக்கங்கள் தாம் இலக்கியங்களிலே இடம் பெற்று வந்தன. தாழ்ந்தவர்கள் என்று கருதப்பட்ட சமுதாயத்தினரால் பின்பற்றப்பட்ட வழக்கங்கள் அவ்வளவாக இலக்கியங்களில் இடம் பெறவில்லை. ஆயினும் மக்கள் வாழ்க்கையைப் பற்றிப் பாடிய புலவர்களால் உண்மையை மறைக்க முடியவில்லை. உயர்ந்த சமுதாயத்தைப் பற்றிப் பாடும்போது அவர்களிடம் உள்ள பழக்க வழக்கங்களைப் பற்றிப் பாடினர்; தாழ்ந்த சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்களுடைய பழக்க வழக்கங்களையும் குறிப்பிட்டனர். பழந்தமிழ்ப் புலவர்களால் பாடப்பட்டிருக்கும் பாடல்களைக் கொண்டுதான் நாம் மேலே கூறிய உண்மைகளைக் காணமுடிகிறது.

பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்திலே பெண்ணுரிமையைப் பற்றிக் குறிப்பிடும் பகுதிகள் உண்டு. அவைகள் பழந்தமிழ்நாட்டு மக்களின் நாகரிகம் பெற்ற வாழ்க்கை நிலையைக் காட்டுவனவாகும்.

தொல்காப்பியர் ஆண்-பெண் சமத்துவத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்தல்
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப

என்பது தொல்காப்பியக் களவியல் சூத்திரம்.

"பயமும், நாணமும், அறியாமையும் முற்பட்டு நிற்றல் எப்பொழுதும் பெண்களுக்கு உரிய குணம்" என்பதே இச்சூத்திரத்தின் பொருள்.

அச்சம், நாணம், மடமை—இம்மூன்று குணங்களும் இயற்கையல்ல. கல்வியறிவின்றி—வெளியுலகை அறியாமல்—வீட்டுக்குள் அடைபட்டுக் கிடப்போரிடம் இக் குணங்கள் இருக்கலாம். வீட்டுக்குள் அடைபட்டுக் கிடப்போர் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி, அவர்களிடம் இக் குணங்கள் அமைந்திருக்கலாம். ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி, நல்ல கல்வியறிவும், வெளிப்பழக்கமும் உள்ளவர்களாயிருந்தால் அவர்களிடம் இம் மூன்று குணங்களையும் காணமுடியாது. ஆதலால் வீட்டுக்குள் அடைபட்டுக் கிடக்கும் நாகரிகம் உள்ள பெண்களிடந்தான் இந்த மூன்று குணங்களும் உண்டு; ஏனைய பெண்களிடம் காணமுடியாது. இன்னும், வாணிகம், தொழில், உத்தியோகம் முதலிய துறைகளில் உள்ள பெண்களிடமெல்லாம் இந்த மூன்று குணங்களும் இருக்கின்றன என்று சொல்லிவிட முடியாது.

முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை

என்பது தொல்காப்பிய அகத்திணை இயல் சூத்திரம்.

"கடல் கடந்து செல்லும்போது, பெண்களையும் அழைத்துக் கொண்டு போகும் வழக்கம் இல்லை" என்று கூறிற்று இச் சூத்திரம்.

எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்

என்பது கற்பியல் சூத்திரம். "எண்ணுதற்கரிய போர்க்களத்துப் படை வீட்டுக்குப் பெண்களுடன் செல்லமாட்டார்கள்" என்று கூறிற்று இச் சூத்திரம்.

இவ் விரண்டு சூத்திரங்களிலும் கூறப்பட்ட பெண்கள், நாகரிகம் பெற்ற சமுதாயத்துப் பெண்கள்; இப் பெண்கள் மனைவிமார்கள்; மணம்புரிந்து கொண்டவர்கள். இதனால் நாகரிகம் பெற்ற சமுதாயத்தில் மணம் புரிந்துகொண்ட பெண்களுக்கு ஆண்களைப் போன்ற உரிமையில்லை என்பதைக் காணலாம்.

பண்டைத் தமிழகத்தில் பாணர் என்ற ஒரு வகுப்பினர் இருந்தனர். அவர்கள், இசை, நடனம், இசைக் கருவிகளை வாசித்தல் ஆகியவைகளையே தொழிலாகக் கொண்டவர். இவர்கள் நுண் கலைகளை வளர்த்து வந்தனர். ஆயினும் இவ்வகுப்பினர் தாழ்ந்த வகுப்பினராகவே கருதப்பட்டனர். சமூகத்திலே செல்வாக்குப் பெற்றிருந்த மன்னர்கள், சிற்றரசர்கள் போன்றவர்களை அண்டித் தான் இவர்கள் வாழ்க்கை நடத்தி வந்தனர். இவ்வகுப்பினருள் ஆணுக்குப் பெண் அடிமை என்ற வழக்கம் இருந்ததில்லை. இருவரும் சமமாகவே வாழ்க்கை நடத்தி வந்தனர்.

பண்டைத் தமிழகத்திலே பெண்களிலே புலமை படைத்தவர்கள் பலர் இருந்தனர். அவர்களுடைய பெயர்களைச் சங்க இலக்கியங்களிலே காணுகின்றோம்.

ஔவையார், வெறிபாடிய காமக்கண்ணியார், பூங்கண் உத்திரையார், காக்கைபாடினியார், நச்செள்ளையார், ஒக்கூர் மாசாத்தியார், மாறோக்கத்து நப்பசலையார் முதலிய பல பெண்கள் புலவர்களாக இருந்திருக்கின்றனர்.

இப்புலவர்களிலே ஔவையாரின் பெயரை அறியாத தமிழ் மக்கள் யாரும் இல்லை. இந்த ஔவையார் பாணர் குலத்துப் பெண் என்பது குறிப்பிடத்தக்கது. மணமாகாத பெண் என்பதும் கருதத் தக்கது. ஏனைய பெண் புலவர்களும் பாணர் குலத்துப் பெண்களாக இருக்கலாம் என்று எண்ணவும் இடம் உண்டு.

கணிகையர், பரத்தையர் என்ற கூட்டத்தைச் சேர்ந்த பெண்களும் அடிமை வாழ்வு நடத்தவில்லை. சுதந்தர வாழ்வுதான் நடத்தி வந்தனர்.

பெண்கள் பாசறைக்குச் செல்லும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது. அரசன் போருக்குப் போகும்போது பெண்களையும் அழைத்துச் செல்வான். அவர்கள் இரவு நேரத்திலே, அரசனுடைய படுக்கையறையைக் காவல்புரிவோர்க்கு உதவி செய்வார்கள். அவர்கள் விளக்கு அணையாமல் பார்த்துக்கொள்ளுவார்கள். தற்பாது காப்புக்காக வாளாயுதமும் வைத்திருப்பார்கள். இச்செய்தியை முல்லைப் பாட்டிலே காணலாம்.

"குறும்தொடி முன்கைக், கூந்தல் அம் சிறுபுறத்து,
இரவு பகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவு வரிக்கச்சின் பூண்ட மங்கையர்,
நெய்உமிழ் சுரையர், நெடும்திரிக் கொளீஇக்
கையமை விளக்கம் நந்துதொறும் மாட்ட (45—49)

["சிறிய வளையல்களை முன்கையிலே அணிந்திருக்கின்றனர். அவர்கள் தலைமயிர் அவிழ்ந்து பிடரியிலே தொங்குகின்றது. இரவைப் பகலாக்கக்கூடிய அவ்வளவு ஒளிபொருந்திய வாட்படையை இடுப்பிலே கட்டித் தொங்கவிட்டிருக்கின்றனர். இப்பெண்கள் எண்ணெய் சிந்தும் குழாய் வடிவமான நீண்ட பந்தத்தைக் கொளுத்தி ஏந்தித் திரிகின்றனர். இவர்கள், பாவை விளக்கு அணையும்போதெல்லாம் அவைகளை மீண்டும் கொளுத்துகின்றனர்."]

இந்த முல்லைப் பாட்டு, பெண்கள் போர்க்களம் புகுந்த செய்தியைக் குறிப்பிடுகின்றது. இப்பெண்கள் வேறு; தொல்காப்பியர் குறிப்பிடும் பாசறைக்குப் போகாத பெண்கள் வேறு. உயர் குலத்திலே, இல்லற வாழ்க்கை நடத்தும் பெண்கள் தாம் பாசறைக்குச் செல்லமாட்டார்கள். பாசறைக்குச் சென்று உதவி செய்யும் பெண்கள் உயர்குலத்துப் பெண்கள் அல்லர்; மணம் செய்துகொண்டு இல்லறம் நடத்தும் குடித்தனப் பெண்களும் அல்லர். அப்படித்தான் எண்ணவேண்டும்.

பண்டைத் தமிழகத்தில் பெண்ணுரிமை மதிக்கப்படவில்லை என்பதற்கு வேறு ஆதரவுகளும் உண்டு.

ஆண்கள் பல பெண்களை மணந்துகொள்ளலாம்; மனைவிமார்களைத் தவிர, விலைமாதர்களுடனும் கூடி வாழலாம். பெண்களுக்கு இத்தகைய உரிமையில்லை; ஒருத்தி ஒருவனைத்தான் மணந்து வாழ வேண்டும்.

"காமக்கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறுகிளவி சொல்லிய எதிரும்"

'காமக்கிழத்தி, மனைவி என்று சொல்லப்பட்ட இவர்கள் வருத்தத்துடன் கூறிய மொழிகளுக்கு எதிராகவும்" என்பது தொல்காப்பியக் கற்பியல் சூத்திரம். இச் சூத்திரம், ஒருவனுக்கு மணம் புரிந்து கொண்ட மனைவியுடன், வேறு மனைவிமார்களும் உண்டு என்பதைக் குறித்தது.

"காமக் கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்"

"இல்லறத்திற்கு உரியவளாக மணந்துகொண்ட காமக்கிழத்தி, வீட்டிற்குப் புறத்திலே விளையாடும், தலைவியின் மகனைத் தழுவிக் கொண்டு வருந்துகின்ற விளையாட்டின் முடிவிலும்" என்பதும் கற்பியல் சூத்திரம்.

இச் சூத்திரத்தில் உள்ள காமக்கிழத்தி என்பது இரண்டாவதாக மணந்துகொண்ட மனைவியைக் குறிக்கின்றது. இது கற்பியலில் "அவன் அறிவு ஆற்ற அறியும் ஆகலின்" என்று தொடங்கும் ஏழாவது சூத்திரத்தின் ஒரு பகுதி. இச் சூத்திரத்திலே "காமக் கிழத்தியர்" என்ற பன்மைச் சொல்லும் காணப்படுகின்றது. "மாயப் பரத்தை உன்னிய வழியும்" என்ற தொடரும் காணப்படு கின்றது. ஆகவே ஒருவனுக்கு, முதலில் மணந்துகொண்ட மனைவி உண்டு; இரண்டாவதாக மணந்துகொண்ட காமக்கிழத்தியர் உண்டு; மூன்றாவதாக பரத்தையர் பலர் உண்டு; என்பதை அறியலாம். கற்பியல் சூத்திரங்கள் பலவற்றிலே இவைகளைக் காணலாம்.

அகப்பொருள் இலக்கியங்களில் உள்ள மருதத்திணைப் பாடல் களிலும் நாம் இந்த உண்மையைக் காணலாம். கணவன் பரத்தையர் சேரிக்குச் சென்று அவர்களுடன் கூடி வாழ்வது; பின்னர் இல்லத் திற்குத் திரும்பி வருவது; கணவன் செய்கையை மனைவி வெறுப்பது; அதற்காக ஊடுவது; கணவனுக்கும் மனைவிக்கும் நேர்ந்த இந்த ஊடலைப் பாணர் முதலியோர் தணிப்பது; இவை போன்ற செய்திகளைக் கூறும் பாடல்கள் காணப்படுகின்றன. இதுவும் உயர்ந்த குலத்தினரிடந்தான், ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி அமைந்திருந்தது என்பதை அறிவதற்குச் சான்றாகும்.

பண்டைத் தமிழகத்தில்—சங்க காலத்திற்கு முன்னே—நிலவியிருந்த ஆண்–பெண் சமத்துவமற்ற நிலையைத் திருவள்ளுவர் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் ஒருத்திக்கு ஒருவன் என்ற நீதி ஆண்களுக்கும் வேண்டும்; ஒருவனுக்கு ஒருத்திதான் வாழ்க்கைத் துணைவியாக இருக்கவேண்டும்; என்றுதான் கூறுகின்றார். இதைத் திருக்குறளில் வாழ்க்கைத்துணை நலம் என்ற அதிகாரத்தால் அறியலாம். "மனைத்தக்க மாண்புடையள்; இல்லாள்கண், இல்லவள்; பெண்ணின்; தெய்வம் தொழாஅள்· சோர்வு இலாள்;" என்பன போன்ற பெண்பால் ஒருமைச் சொற்களாலேயே மனைவியை குறிப்பிடுகின்றார். இதுவே ஒருவன் ஒரு மனைவியை மணக்க வேண்டும் என்பதை வள்ளுவர் வலியுறுத்துகின்றார் என்பதைக் காட்டும்.

வரைவின் மகளிர் என்ற அதிகாரத்தால் பரத்தையர் கூட்டுறவைக் கண்டிக்கின்றார். காமத்துப்பாலிலே காதலன் பரத்தையரை நாடிச்செல்லும் பகுதியே காணப்படவில்லை. களவியலில் காதல் மணம் கூறப்படுகின்றது. கற்பியலில் காதலன் காதலியர் இடையே நடைபெறும் ஊடல் செய்திகள்தான் உரைக்கப்படுகின்றன. இதனாலும் பண்டைக்காலத்தில் இருந்த ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற கொள்கையை வள்ளுவர் ஒப்புக் கொள்ளவில்லை என்றே கூறலாம்.

ஆனால், வள்ளுவர் பெண்களையும் ஆண்களையும் சமமாகக் கருதினார் என்று கூறமுடியாது. பெண்கள், அச்சம், மடம், நாணம் ஆகிய குணங்களை இயல்பாகவே உடையவர்கள் என்றுதான் கருதுகின்றார். பெண்கள் வீட்டில் இருந்துகொண்டு இல்லறத்தை நன்றாக நடத்துவதற்குத்தான் உரியவர்கள்; பொது வாழ்க்கையில் பங்குகொள்ள உரியவர்கள் அல்லர்; என்றுதான் கருதுகின்றார். பெண்களைப் பற்றி வள்ளுவர் கொண்டுள்ள கருத்தைப் "பெண்வழிச் சேரல்" என்ற அதிகாரத்திலே தெளிவாகக் காணலாம்.

"இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்
நல்லாருள் நாணுத் தரும்"

["மனையாளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் முறையற்ற காரியம் எந்நாளும் பெரியோர் கூட்டத்திலே வெட்கம் தரும் செயலாகும்".]

"இல்லாளை அஞ்சுவான் அஞ்சும்,மற்று எஞ்ஞான்றும்
நல்லார்க்கு நல்ல செயல்".

["மனைவிக்கு அஞ்சுகிறவன் எந்நாளும் நல்லவர்களுக்கு நன்மை செய்யமாட்டான்".]

"நட்டார் குறைமுடியார், நன்றுஆற்ருர், நல்லுதலாள்
பெட்டாங்கு ஒழுகு பவர்".

["தம் மனைவியின் விருப்பத்தின்படியே நடந்துகொள்ளுகின்றவர்கள், நண்பர்களின் குறைகளைத் தீர்க்கமாட்டார்கள்; நல்ல காரியங்களையும் செய்யமாட்டார்கள்".]

இம் மூன்று குறள்களைக் கொண்டே பெண்களைப் பற்றிய வள்ளுவர் கருத்தை மட்டும் அன்று, வள்ளுவர் காலத்திலிருந்த தமிழ்நாட்டுச் சான்றேர்களின் கருத்தையும் அறியலாம். வள்ளுவரால் குறிக்கப்படும் மனைவிமார்கள், நாகரிகம் பெற்ற உயர்குலத்து வீட்டுப் பெண்கள் தாம் என்றுதான் கொள்ளவேண்டும்.

பண்டைக் காலத்தில் இருந்த கொள்கையை ஒட்டித்தான் பிற்காலத்தில் கதைகளும் எழுந்தன. சிலப்பதிகாரத்திலே கண்ணகியைப் பற்றிக் கூறும் செய்தியை இதற்கு உதாரணமாகக் கூறலாம். மனைவி என்ற முறையில் கண்ணகியைப் பற்றிக் கூறும்போது, அவள் பழய பண்பாடுள்ளவளாகவே காட்டப்படுகின்ருள். தன் கணவன் தன்னை விட்டுப் பிரிந்து மாதவியிடம் சென்றதற்காக, அவன்மீது அவள் சினங்கொள்ளவே இல்லை. அவன் செல்வம் எல்லாம் இழந்து, மாதவியை விட்டுப் பிரிந்து, கண்ணகியிடம் வந்தான். "மாயப் பரத்தையால் பொருள் இழந்தேன்" என்ருன். உடனே கண்ணகி அவன் மீண்டும் மாதவியை நாடிச்செல்வதற்தாகத் தன் காற்சிலம்பை எடுத்துக் கொடுக்கின்ருள். சிலப்பதிகாரத்தில் உள்ள இப்பகுதி, கணவன் எந்த அநீதியைச் செய்தாலும், அதைக் கண்டிக்கும் உரிமை மனைவிக்கு இல்லை என்ற பழந்தமிழர் கொள்கையைத்தான் காட்டுகின்றது.

பெண்ணடிமையைப்பற்றி இலக்கியங்கள் எவ்வளவு வலியுறுத்தி வந்தாலும் அது நீடித்து நிற்கவில்லை. ஆணுக்குப் பெண் அடிமையாக வாழ்வதுதான் கற்பு, நீதி, ஒழுங்கு என்று நீதி நூல்களிலும், கதைகளிலும் வலியுறுத்தப்பட்டாலும், அடிமை விலங்கு நிலைத்திருக்கவில்லை. பழங்காலத்து அடிமை முறை இனித் திரும்பி வரமுடியாது. வளர்ச்சி, முன்னேற்றம்தான் மக்கள் வாழ்வில் காணப்படும் இயற்கை. இந்த இயற்கையை ஒட்டியே இன்று ஆணும் பெண்ணும் ஒரே சமுதாயமாக வளர்ந்து வருகின்றனர்.

"கற்பு கற்பென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்".

என்ற பாரதி பாட்டைப் பாடும் காலம் இது. ஆண்கள் செய்யும் தொழில் அத்தனையும் பெண்கள் செய்யும் சமத்துவமுள்ள காலம் இது. ஆதலால் பழமையைப்பற்றிச் சரித்திரமாகத் தெரிந்து

கொள்ளலாம்; அதைப் பின்பற்ற வேண்டும் என்று கூறுவது காலத்தின் வளர்ச்சியை அறியாதவர் கூற்று.

இதுவரையிலும் கூறியவற்றைக்கொண்டு சில உண்மைகளைக் காணலாம்.

பண்டைக்காலத் தமிழகத்தில் உயர்ந்தவராகக் கருதப்பட்ட சமுதாயத்தில்தான் பெண்ணடிமைமுறை பிறந்தது; ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற கொள்கையும் தோன்றிற்று.

உயர்ந்தவர்களாகக் கருதப்படாத சமுதாயத்திலே ஆண் பெண் உறவு சமத்துவமாகத்தான் இருந்தது.

உயர்ந்த குலத்துப் பெண்களுக்குக் கல்வி அறிவு, கலை அறிவு கூட இல்லை. தாழ்ந்த குலத்தினராகக் கருதப்பட்ட பாணர் குலத்துப் பெண்கள் தான் கலை அறிவு படைத்திருந்தனர். அவர்களில் தான் தமிழ்ப் புலமை பெற்றவர்களும் இருந்தனர்.

உயர்குலத்துப் பெண்கள் இல்லாள், மனையாள் என்ற பெயர்களுடன் வீட்டில்தான் அடைபட்டுக்கிடந்தனர். தாழ்ந்த குலத்துப் பெண்கள் தான் பொதுவேலைகளுக்குப் பயன்பட்டனர்.

பண்டைத் தமிழகத்திலிருந்த இந்த நிலைமை சிறிது சிறிதாக மாறி வந்தது. உயர்குலத்துப் பெண்களும் சம உரிமை பெற்று விட்டனர். இன்றைய சமுதாயத்தில், பழைய பெண்ணடிமை முறை ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று. பழமை மாறித்தான் தீரும்; ஆனால் பழமையில் உள்ள நன்மைகள்மட்டும் எக்காலத்திலும் நிலைத்திருக்கும். அநீதிகள் நிலைநிற்கமாட்டா. காலத்திற்கு ஏற்பப் புதியமுறையிலே மக்கள் வாழ்க்கைமுறை மாறுவது இயற்கை. இந்த இயற்கையை ஒட்டியே நமது சமுதாயம் வளர்ந்து வருகின்றது. பழமைதான் சிறந்தது என்று எண்ணிக்கொண்டு புதிய மாறுதல்களுக்கு முட்டுக் கட்டை போடமுடியாது; போட நினைத்தால் அது வெற்றிபெறாது.

இவ்வுண்மைகளைப் பழைய இலக்கியங்களும், மக்கள் சமுதாய வளர்ச்சியும் நமக்குக் காட்டுகின்றன. "புதியன புகுதலும், பழயன கழிதலும்" இயற்கையாகும். ஆனால் புதிய பழக்க வழக்கங்களைக் காட்டும் இலக்கியங்கள் மட்டும் இன்னும் பெருகவில்லை. இத்தகைய இலக்கியங்களை உண்டாக்குவதே மொழி வளர்ச்சிக்கான வழியாகும்

சென்ற இதழ் 46-ஆம் பக்கத் தொடர்ச்சி.

இலியத் (ILIAD)

சருக்கம்-எழுதியது

விரிஞ்சை, மு. பழநி, எம்.ஏ.

திராயைச் சுற்றியிருந்த பல இடங்களை முறியடித்து வெற்றி பெற்றான் அகிலெசு. தோல்வியுற்ற நாடுகளிலிருந்து அழகிய பெண்களைக் கவர்ந்து வருவது பண்டைக் காலத்தில் நாகரிகமாகக் கருதப்பட்டது போலும். அகிலெசு பிரீசிசு [36] என்னும் ஓர் அழகிய பெண்ணைக் கவர்ந்து வந்தான். அகமெம்னனும் கிரியிசிசு, [37] என்னும் பெண்ணைக் கவர்ந்து வந்துவிட்டான். கிரியிசிசு, அப்பொல்லோ [38] எனும் கடவுளின் பாதிரியினுடைய மகளாவாள். இதைக் கேட்டு நெஞ்சு பொறுக்காது பாதிரியார் ஓடிவந்து பணிந்து தன் மகளைக் கொடுத்துவிடும்படி கேட்டார். மனம் நோகும்படி அவரைப் பேசி அனுப்பி விட்டான் அகமெம்னன். அப்பொல்லோ தெய்வத்தை நினைத்துத் தன் குறைகளைச் சொல்லி முறையிட்டார். அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் படையைத் தேய்க்குமல்லவா? அதற்கேற்ப ஒரு தீவிரமாகப் பரவக்கூடிய கொடிய நோயைக் கிரேக்க வீரர் இருக்கும் பாசறைகளுக்கு அப்பொல்லோ தெய்வம் அனுப்பியது. பல வீரர் இறைவனடி சேர்ந்தனர். காரணம் தெரியாமல் அகிலெசு விழித்தான். உடனே காலகசு [39] எழுந்து "அகமெம்னன் பாதிரியாரை மனம் நோகும்படி பேசியது தான் காரணம். உடனே அவன் கிரியிசிசை அவரிடம் அனுப்பினால் தான் இந்நோய் நம்மைத் தாக்காது." என்று அறிஞனுகையால் உணர்ந்து சொன்னான். என்னிடம் இருக்கும் பரிசை, அஃதாவது கிரியிசிசை, அனுப்பிவிட்டால் அகிலெசின் பரிசாகிய பிரீசியை நான் கவர்ந்து கொள்வேன் என்று வீரமுழக்கம் செய்தான் அகமெம்னன். இந்த நிகழ்ச்சியால் இருபெரு கிரேக்க வீரர்க்குள் பகைமை ஏற்பட்டு விட்டது. அகமெம்னனும் அகிலெசும் தமக்குள் போர்க்கு எழுந்து எதினா என்னும் தேவதையின் ஆணையால் அடங்கினர். எதினாவின் ஆணையால் அகிலெசு, தான் கவர்ந்து வந்த பெணணாகிய பிரீசிசை அகமெம்னனிடம் அனுப்பிவிட்டான் பிறகு அகமெம்னன் கிரியிசிசை அவள் தந்தை பாதிரியாரிடம் அனுப்பிவிட்டான். நோயும் பறந்தோடியது. இனி அகமெம்னனுக்காகப் போர் செய்யக்கூடாது என்று உறுதி செய்தவாறே மிகவும் வாட்ட முற்றுத் தன் பாசறைக்குச் சென்றான் அகிலெசு.

அகிலெசு தன் தாயை நினைத்து வருந்தவே தீதிசு வந்து "அகமெம்னன் தக்க தண்டனை பெறுவான்" என்று ஆறுதல் கூறிச் சென்றது. ஆவேசங்கொண்ட அகமெம்னன் படையை நடத்திக்கொண்டு போர்க்களத்திற்கு வந்தான். தொடர்ந்து பத்தாண்டுகள் போர் நடத்தவே கிரேக்க வீரர் தளர்ந்து சோர்வடைந்தனர். தம் நாடு திரும்பவேண்டும் என்று எண்ணினர் ஆனால்

36. Briseis 37. Chryseis 38. Apollo 39. Calchas.

ஒதிசிசின் வீரப் பேச்சால்தான் மறுபடியும் மனத்திண்மை பெற்றுப் போர்க்களத்தில் வீரம் விளைக்க முனைந்தனர். முதியவன் பிரியம் தன்னுடைய நண்பர்களோடு திராய் மதிலின் மேடைமீது அமர்ந்து கொண்டு கிரேக்கப்படை வருவதைக் கவனித்துக்கொண்டிருந்தான். அங்கு எலனும் வந்துசேர்ந்தாள். ஒரு பெண்ணிற்காக இரு பெரு நாடுகளும் அழிவது வருந்தத் தக்கதாய் இருக்கிறது; இவளைத் திருப்பி அனுப்பிவிட்டால் என்ன என்று ஒரு முதியவன் பிரியமிடம் சொல்லிக்கொண்டிருந்தான். தன் பொருட்டு இருநாட்டு மாவீரரும் வீணாக அழிவதைக் கண்டு நெக்கு நெக்கு உள் உருகி நைந்தாள் எலன். மறவர் பலர் அழிவதைக் கண்டு எல்லோரும் அஞ்சி நடுங்கினர். "பாரிசும் மெனிலசும் தமியராய் நின்று எதிர்ந்து போர் செய்தல் வேண்டும். வெற்றி பெறுபவன் யாவனாயினும் அவனுக்கு எலன் உரியவளாவாள், மனைவியாவாள்" என்று இருபக்கத்துப் படைத்தலைவரும் ஒருங்கிருந்து ஓர் ஒப்பந்தம் செய்தனர். இருவரும் அடலேறுகள் போன்று கொதிந்தெழுந்து எதிர்த்தனர். பாரிசு இறக்கும் தறுவாயில் அப்ரொடைட் எனும் தேவதையால் காப்பாற்றப்பட்டு மேகத்தினிடையில் தூக்கிச் செல்லப்பட்டான். எங்கு தேடியும் பாரிசு கிடைக்கவில்லை. ஆகவே "மெனிலசுக்கே எலன் உரியவள்" என்று அகமெம்னன் வீரமுழக்கம் செய்தான். அப்பொழுது எதினா எனும் தேவதையினால் தூண்டப்பட்டு ஒரு திராய் வீரன் மெனிலசை நோக்கி ஓர் அம்பு எய்தான். அது பட்டு மெனிலசின் உடம்பிலிருந்து குருதி கொட்டிற்று. அதுகண்டு கிரேக்க வீரர் சீற்றம் கொண்டு மறுபடியும் தாக்கினர். ஒப்பந்தத்தைக் கைவிட்ட திராய் வீரர் மானமிழந்தவர் என்ற ஆரவாரம் கிளம்பிற்று. குழப்பம் ஏற்பட்டது. இருபடைகளும் எதிர்த்து வன்மையாகப் போராடின. பலர் மாண்டனர். செருக்களம் செங்களமாயிற்று.

மறுபடியும் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டு அஞ்சா நெஞ்சம் படைத்த எத்தரும் பேருருவம் படைத்த அசெக்சும் தமியராய் நின்று எதிர்த்தனர். ஈட்டிகளைக்கொண்டும் வாள்களைக்கொண்டும் நெடுநேரம் போராடினர். மற்போரும் செய்தனர். இருட்டிவிட்டது; ஆகவே வெற்றி தோல்வியில்லாமல் இருவரும் பிரிந்தனர். "அசெக்ச்! நீ உண்மையில் ஒரு வலிமையுள்ள பெரு வீரனே" என்று புகழ்ந்து ஒரு வீரவாளை எத்தர் பரிசாகக் கொடுத்தான். அசெக்சும் பரிசு தந்தான். இருவரும் நண்பராகப் பிரிந்தனர். மறுநாள் அகமெம்னன் மனத்திட்பத்தோடு படையை நடத்திச் சென்று பல திராய் வீரர் இரிந்து ஓடும்படி நெடுநேரம் கடும்போர் செய்தான். கிரேக்கப் பெருவீரர் யாவரும் மார்பில் புண்ணேற்றுத் தம் பாசறைகளுக்குத் திரும்பினர். முதியவன் நெச்டர், வீரர் புண்களுக்கு மருந்திட்டு ஆறுதல் கொடுத்தான். இவைகளை யெல்லாம் அகிலெசு பார்த்துக் கொண்டுதானிருந்தான். அகிலெசுக்கு ஒரு சிறந்த நண்பன் இருந்தான்; அவன் பெயர் பெத்ராகுலசு[40] என்பது. இவனும்

40. Patroclus.

அகிலெசு போன்று உயிர்க்கு அஞ்சாது கலங்காது போரிடும் தன்மையன். "அகிலெசு மனமிரங்கிப் போர்செய்ய வராவிட்டாலும் நீயாகிலும் அவன் வட்டுடைகளையும் அவனுக்கேயுரிய போர்க்கருவி களையும் பெற்றுப்போர்க்களத்திற்கு வருவாயானுல் அகிலெசு என்று திராய் வீரர் நினைத்துப் பின்வாங்குவர்; அஃதாவது நீ செய்யலாமே" என்று நெச்டர் பெத்ராகுலசிற்கு மனம் வருந்திச் சொன்னுன். ஆவேசங்கொண்ட பெத்ராகுலசு அகிலெசை அடைந்து கேட்கத், தான் போர்க்களத்திற்கு வருவதிற்கில்லை என்ருன்; ஆனுல் தன் வட்டுடைகளையும் போர்க்கருவிகளையும் பெத்ராகுலசிற்குக் கொடுக்க இசைந்தான். அவைகளை அணிந்துகொண்டு தேரேறிப் புறப் பட்டான் பெத்ராகுலசு. அகிலெசுதான் போர்க்கோலம்பூண்டு வந்துவிட்டான் என்று நினைத்துப் பலர் மருண்டோடினர்.

சார்ப்பீதனும் பெத்ராகுலசும் பெருங்கழுகுகள் போன்று ஆர வாரம் செய்து போரிட்டனர். இறுதியில் சார்ப்பீதன் மண்ணிடை வீழ்ந்து இறந்தான். வெற்றிமேல் வெற்றி பெத்ராகுலசிற்கு ஏற் பட்டது. எக்தர் இதைப்பார்த்துக் கொதித்தெழுந்து பெத்ராகுலசைத் தாக்கினுன். அப்போலோ எனும் தெய்வம் எக்தருக்கு உதவி செய் தது. மகுடத்தின்மேல் ஒரு வன்மையான அடிவிழவே என்றும் மண்மகள் அறியாத அகிலெசின் மகுடம் அன்று மண்மீது உருண் டது. என் நண்பன் அகிலெசு எப்படியும் பழிதீர்ப்பான் என்று சொல்லி உயிர்துறந்தான் பெத்ராகுலசு. அகிலெசின் வட்டுடை யையும் போர்க் கருவிகளையும் எக்தர் கவர்ந்துகொண்டான். செய்தி அகிலெசிற்கு எட்டிற்று. தன்னுடைய அருமை நண்பன் இறந்து பட்டதாலும் போர்க்கருவிகளை எக்தர் கவர்ந்துசென்றதாலும் என்றும் கலங்காத அகிலெசு அன்று மனமுடைந்து புலம்பினுன். தாயாகிய தீதிசு வந்து ஆறுதல் கூறி வேறு படைக்கலங்களைக் கொடுத்துச் சென்றது. கொதித்தெழுந்தான். நரம்புகளில் முறுக் கேறிப் போர்வெறி பிறந்தது. அரிமா குகையிலிருந்து புறப்பட்டது போல் வீறுகொண்டு புறப்பட்டான். யாவரையும் கொன்று குவித்து வாகைசூடிப் பழிதீர்ப்பேன் என்று வீரமுழக்கம் செய்துகொண்டு போர்க்களம் நோக்கி விரைந்தான். கழுகுகளும் பருந்துகளும் கூற்றுவனும் பின்தொடர்ந்தன. கிரேக்க வீரர் அகிலெசைக் கண்டதும் மகிழ்ந்து இனி வெற்றிகிட்டுவது உறுதி என்று ஆரவாரம் செய்தனர். அகிலெசைக் கண்ட அகமெம்னன் "இனி நான் உனக்கு நண்பன், உன்னுடைய பரிசாகிய பிரீசிசையும், பொருள் களையும் திருப்பி அனுப்பிவிடுகிறேன்" என்று மகிழ்ந்துரைத்தான். திராய் வீரரைக் கொன்று மலையெனக் குவித்தான் அகிலெசு. அகி லெசின் ஆற்றலுக்கு ஆற்ருது திராய்ப்படை பின்வாங்கியது. இவ னுடைய வீரம் செறிந்த போரைக் காணவேண்டும் என்ற ஆசையால் கடவுளர் எல்லாம் ஒலிம்பசு மலையிலிருந்து விண்ணிலே வந்து நிறைந்து கண்டுகொண்டிருந்தன. 'அகிலெசு சீற்றத்தோடு வருகிருன், அவனேடு போரிடவேண்டாம், மதிலுக்குள்ளாக வந்து விடு' என்று மனமிரங்கிப் பிரியம் தன் மகனுகிய எக்தருக்குச்

தமிழில் தாவரம்.

கு. சீநிவாசன், M. Sc., தாவர விரிவுரையாளர், அண்ணமலைநகர்.

ஆம்பல்; செங்கழுநீர்

ஆம்பலெனுஞ் சொல் ஆம்பற் பூவினை யன்றி, ஆம்பற் பண்ணையும், ஒருவகைக் குழலையும், பேரெண்ணையும் குறிக்கும். ஆம்பற் பூ இந்நாளில் அல்லிப் பூ எனப்படுகின்றது. (நற். 6 உரை.)

ஆம்பலந் தீங்குழல் குறிஞ்—222
ஆம்பற் குழலால் கலி—108

என்பதற்கு ஆம்பலென்னும் பண்ணையுடைய குழலாலே என்றும்,

பையுள் செய்யாம்பல் சீவக. 1314

என்பதற்கு ஆம்பற் பண்ணையுடைய குழல் என்றும், ஆம்பல் (சீவக. 1662) ஆம்பலென்னும் பண் என்றும் ஆசிரியர் நச்சினுர்க்கினியர் உரை கூறினர்.

ஆம்பலந் தீங்குழல் கேளாமோ சிலம்பு. 17

என்ற விடத்து அரும்பத உரையாசிரியர், "ஆம்பல் முதலானவை சில கருவி; ஆம்பல்—பண்ணுமாம்; மொழியாம்பல், வாயாம்பல்,

---

78-ஆம் பக்கத் தொடர்ச்சி.

சொன்னுன். இசையாது தளராது புலிபோன்று சீறி அகிலெசைத் தாக்கினுன். இப்பெருந் தறுகண் வீரரும் தளராது போரிட்டனர். இமயமலை வீழ்ந்ததுபோல் எக்தர் விழுப்புண் ஏற்று மண்மீது வீழ்ந்தான். அவனுடலம் புழுதியில் புரண்டது. "பெத்ராகுலசைக் கொன்று வாகை சூடினேன் என்று இனி நீ செருக்குக்கொள்ள முடியாது" என்று எக்தர்மீது நின்றுகொண்டு வீரமுழக்கம் செய்தான் அகிலெசு. "என்னுடலத்தைப் புதைப்பதற்கு என் நண்பரிடம் கொடுத்துவிடு" என்று உயிர்போகும் நிலையிலிருக்கும் எக்தர் கெஞ்சிக்கேட்டான். 'உன்னுடைய பிணம் நாய்களுக்கே வீசப்படும்' என்று மனம் இரங்காது பதிலுரைத்தான். 'நீ பெரு வீரனுயினும் என் தம்பி பாரிசால் கொல்லப்படுவாய்' என்று சொல்லி ஆவிதுறந்தான் எக்தர். எக்தரின் பிணத்தைத் தேர்க்காலில் கட்டி இழுத்துச் சென்ருன் அகிலெசு. எக்தரின் பிணம் மண்ணில் புரண்டு புரண்டு சென்றது. இன்னுதம்ம இவ்வுலகம்! முதியவனுன பிரியம் அஞ்சாமல் அகிலெசிடம் சென்று தன் மகனுடைய பிணத்தைக் கொடுத்துவிடு என்று கெஞ்சிக் கேட்டான். முதியவனின் நிலையைக்கண்டு மனம் இரங்கிப் பிணத்தைக் கொடுத்திட்டான். உரிய முறையில் அடக்கம் செய்வதற்கு எக்தரின் பிணத்தைப் பிரியம் வாங்கிக்கொண்டு சென்ருன். இந்நிகழ்ச்சியோடு இலியத் எனும் சிந்தையள்ளும் காப்பியம் முடிந்துவிடுகிறது. இலியத், அகிலெசின் வீரச் செயல்களைப் புகழ்ந்து பாடுதற்கு எழுந்ததெனவேபடும்.

(தொடரும்)

முத்தாம்பல் என்று சொல்லுவர் பண்ணுக்கு", என்றார். அடியார்க்கு நல்லார் ஆம்பற் பண்ணெனன்பாரை மறுத்து, வெண்கலத்தால் குமுத வடிவாக அணைசுபண்ணிச் செறித்த குழல், என்று கூறுநிற்பர்.

ஆம்பலங் குழலின் ஏங்கி நற். 113

என்பதற்குப் பின்னத்தூரார், அடியார்க்கு நல்லாரைப் பின்பற்றி வெண்கலத்தால் ஆம்பற் பூ வடிவாக அணைசுபண்ணி நுனியில் வைக்கப்பட்ட புல்லாங்குழல் என உரை கண்டார். ஆகவே ஆம்பல் ஒரு பண்ணென்பதும், ஒருவகைக் குழல் என்பதும் அறியலாம்.

அடையடுப் பறியா அருவி யாம்பல்
ஆயிர வெள்ள வூழி
வாழியாத வாழிய பலவே பதிற். 63

நெய்தலுங் குவளையும் ஆம்பலுஞ் சங்கமும் பரி. 2

அனைத்தும் அல்ல பல அடுக்கல் ஆம்பல்
இனைத் தென எண்வரம் பறியா பரி. 3—44

என்பனவற்றுள் ஆம்பலென்பது பேரெண்ணைக் குறிப்பதாயிற்று.

ஆம்பல், தாமரை, செங்குவளையாகிய செங்கழுநீர் முதலியவை நீரில் வாழும் நிம்பயேசி (Nymphaeaceae) என்ற தாவரக் குடும்பத்தைச் சார்ந்தவை. நமது நாட்டில் இக்குடும்பத்தைச் சேர்ந்த நிம்பேயா (Nymphaea) என்ற அல்லியினமும், நிலம்பியம் (Nelumbium) என்ற தாமரையினமும் இயற்கையாக வளர்வன. விக்டோரியா (Victoria) என்ற பெருந்தாமரையினம், பம்பாயிலும் வடநாட்டில் சில விடங்களிலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. விக்டோரியா ரீஜியா (Victoria regia) என்ற இப் பெருந்தாமரையிலை ஐந்தரை முதல் ஆறடி வரையில் அகன்றது. தாவர உலகில் மிகப் பெரிய இலை இதுவேயாகும். இதன் பூவும் மிகப் பெரியது. இச் செடி இமயத்திலுள்ள மானச வாவியில் செழித்து வளர்கின்ற தென்பர். நிம்பேயா (Nymphaea) எனும் அல்லியினத்தில் நூற்றுக்கு மேற்பட்ட வகைகள் (Species) உலகில் பல்வேறிடங்களில் வளர்கின்றன. எனினும் நமது நாட்டில் நான்கு வகைகள் உள்ளன வென்று ஹூக்கர் (Hooker) என்பாரும், தமிழ் நாட்டில் ஆம்பல், தாமரையாகிய இருவகையின வளர்கின்றன என்று காம்பிள் (Gamble) என்பாரும் குறிப்பிடுகின்றனர். இவற்றுள் நிம்பேயா பூபெசன்ஸ் (Nymphaea pubescens, Willd) என்பதே அல்லி யெனப்படும் ஆம்பலாகும்.

ஆம்பல் கடற்பரப்பிற்கு மூவாயிரம் அடி உயரத்திற்குள்ளான நல்ல புதுநீர் நிரம்பிய குளங் குட்டைகளில் வளரும். இதன் கிழங்குதான் இச்செடிக்குத் தண்டு (Stem) ஆகும்.

தேன் நா றும்பல் கிழங்கொடு பெறூஉம்
இழுமென ஒலிக்கும் புனல் புற. 176

என்பதால் நீரில் இதன் கிழங்கு பெயர்ந்து வருவது கூறப்படுகின்றது. இக்கிழங்கைப் பறித்து உண்பதுண்டு. கிழங்கினின்று கிளம்பும் இதன் இலை நீர்ப்பரப்பிற்குமேல் வந்து மிதக்கும். முட்டை அல்லது வட்ட வடிவினதாகிய இவ்விலையில் பிளவு ஒன்றுண்டு. இப்பிளவு, இலை விளிம்பிலிருந்து இலைக்காம்புவரை நீண்டிருக்கும். இலைக்காம்பு நீளமானது. நீரளவிற்கு நீண்டு கொடுக்கும் (Elongation) ஓர் இயல்பு இதன்பாலுளது. குளங்குட்டைகளில் திடீரென நீர் நிரம்பிவிடுமாயின், இவ்வியல்பால் இலைக்காம்பு ஓரிரு நாளில் நீண்டு கொடுத்து இலையை நீர்ப்பரப்பில் நிலைக்கச் செய்யும். இவ்வியல்பு பூக்காம்பிற்கும் உண்டு. இலையின் கணுக்குருத்து வளர்ந்து பூவாகுமெனினும், இலைக்காம்பிற்கும் பூக்காம்பிற்கும் உள்ளமைப்பில் (Histology) ஒரே ஒரு வேறுபாடுண்டு. இலைக்காம்பில் இருபெருந் துளைகளே நடுவில் உள்ளன. பூக்காம்பில் ஐம்பெருந் துளைகள் நடுவில் அமைந்துள்ளன. இத்துளைகள் காற்றை நிரப்பி வைத்து இலையையும், பூவையும் நீர்ப்பரப்பிற்கு மேல் கொண்டுவரத் துணை செய்கின்றன,

தூம்புடைத் திரள்கா லாம்பல் குறுந். 178

பொய்கைப் பூத்த புழைக்கா லாம்பல் ஐங். 34

புழற் கா லாம்ப லகலடை புற. 266

என்பனவற்றால் தமிழ் மக்கள் ஆம்பலின் இலைக் காம்பிலும், பூக்காம்பிலும் உள்ள தூம்பறிந்திருந்தனர் என்பது புலனாகும்.

இப்பூக்காம்பிலும் (Pedicel), இலைக் காம்பிலும் (Petiole) உள்ள புறணி (Epidermis) என்ற நார் உரி நீக்கப் பெறுமாயின், இவை நுண்ணிய செம்புள்ளிகளுடன் அழகாகக் காணப்படும். நாருரித்த இக்காம்புகளின் புறத்துள்ள சில உயிரணுக்களில் (Cells) ஆந்தோசையனின் (Anthocyanin) என்ற வேதிப்பொருள் உயிரணுச் சாற்றில் (cell-sap) கரைந்திருத்தலின் இந்நிறம் பெற்றுத் திகழும். கண் கவரும் இந்நிறத்தை மங்கல மகளிர்க்கு இயற்கையிலுண்டாகும் பருவக்கால அழகிற்கு உவமிப்பர். இக் கவின் மாமை எனப்படும், மாமை என்பதற்கு மாந்தளிர் போன்ற நிற மென்பாருமுளர்.

நீர்வளர் ஆம்பல் தூம்புடைத் திரள்கால்
நார் உரித்தன்ன மதனில் மாமை நற். 6

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பொய்கை யாம்பல் நார்உரி மென்கால்
நிறத்தினும் நிழற்றுதல் மன்னே
இனிப்பசந் தன்று என் மாமைக் கவினே ஐங். 35

பசலை உணீஇயர் வேண்டும்
திதலை யல்குலென் மாமைக் கவினே குறு. 27

என்பன மாமைக் கவினைப் புலப்படுத்தும். ஆம்பற் பூக்காம்பை ஒடித்து மணிமாலை போலாக்கி மகளிர் வளையலாக அணிதலுண் டென்பதை "ஆம்பல் வள்ளித் தொடிக்கை மகளிர்" (புற. 63, 352.) என்பன அறிவிக்கும்.

இதன் பூவில் நான்கு புற விதழ்களும் (Sepals) பத்துப் பதினைந்து அகவிதழ்களும் (Petals) உள்ளன. புறவிதழ்களின் வெளிப்புறம் பசுமையானது. கூம்பிய ஆம்பல் முகைக்கு, கொக்கு, சிறகர் இவற்றின் பசிய புறம் உவமிக்கப் படுகின்றது.

பைங்காற் கொக்கின் புன்புறத் தன்ன
குண்டுநீ ராம்பலுங் கூம்பின (குறு.–122)

ஆம்பற் பூவின் சாம்ப லன்ன
கூம்பிய சிறகர் மனைஉறை குரீஇ (குறு–46)

என்பன காண்க. புறவிதழின் உட்பாகம் வெள்ளாம்பற் பூவில் வெண்மையாகவும், செவ்வாம்பலில் சிவப்பாகவும் இருக்கும். பொதுவாகப் புறவிதழும் அகவிதழும் இணைந்து ஒன்றாகியிருக்குமாயின் அவ்வகை யிதழ்த் தொகுதியைத் தாவர நூலில் அல்லி (Perianth) என்பர். ஆம்பற் பூவின் புறவிதழ்கள் இரு நிறமுடைமையின் இதனையும் அல்லியெனக் கூறுதல் ஒக்கும்.

அரிநீ ரவிழ்நீல மல்லி யனிச்சம் — கலி–91,

என்ற அடிக்கு நச்சினார்க்கினியர், நறும்பூவோடே அழகிய நீரில் அலர்ந்த அல்லியையுடைய நீலப்பூ அனிச்சப்பூ, என்று உரை கூறுகின்றார். இதனை ஒட்டியே, அல்லி கழுநீர் அரவிந்தம் ஆம்பல் என்ற பரிபாடல் (12–78) அடிக்கு அல்லியையுடைய கழுநீர், அரவிந்தம், ஆம்பல் எனப்பொருள் கொள்ளுதல்வேண்டும். அல்லா வழி அல்லி வேறு ஆம்பல் வேறு போலுமென மயங்க நேரும். மற்றும் ஆம்பற்காய்க்கும் அல்லியென்ற பெயருண்டு. ஆம்பற் பூவின் காயாகிய அல்லியைக் கணவனையிழந்த கழிகல மகளிர் உண்ணும் ஒரு வழக்குண்டு. இதனை,

சிறுவெள் ளாம்பல் அல்லி உண்ணும்
கழிகல மகளிர் போல புற. 280.

என்பதால் அறியக்கூடும்.

ஆம்பலில் இருவகையுண்டு—ஒன்று வெள்ளாம்பல் (நற். 290), மற்றொன்று செவ்வாம்பல்—இது அரக்காம்பலெனவும்படும்.

இவை தாவர நூலில் ஒருவகையின் (Species) உட்பிரிவென்றே (Variety) கூறப்படுகின்றது. தமிழ்நாட்டில் வளரும் நிம்பேயா

இனத்தின் (Genus) மற்றொருவகை நிம்பேயா ஸ்டெல்லேட்டா (Nymphaea stellata, Willd) என்பது. இதுவே செங்கழுநீர்ப் பூவாகும். இதற்கும் செவ்வாம்பலுக்கும் வேறுபாடு மிகச் சிறிது. செங்கழு நீர்ச்செடி, இலை, பூ எல்லாம் செவ்வாம்பலினும் சற்று சிறியதாக இருக்கும். செவ்வாம்பலிலை ஒன்பது முதல் பன்னிரண்டு அங்குலம் வரை அகலமானது. கூரிய பற்களையொத்த இலை விளிம்புடையது. இலையின் அடிப்புறத்தில் மிகவும் நொய்தான நுண்ணிய மயிர்ப்பொருள்கள் உள்ளன. செங்கழுநீரின் இலை ஆறு முதல் ஒன்பது அங்குல அகலமும், இலை விளிம்பற்றும், மயிர்ப் பொருளின்றியுமிருக்கும். செங்கழுநீரில் வெண்ணிறப் பூக்களில்லை. நீலமும், செம்மையும், செம்மை சற்றேறக்குறைந்த வகைப் பிரிவு களும் உள்ளன. இவையனைத்தும் Nymphaea stellata, Willd. என்ற செங்கழுநீர்வகைப் பிரிவுகளே யாகும். கழுநீர்ப் பூவினும் ஆம்பற்பூ சற்று நீளமாக இருக்குமாயினும் இதனைப் பிரித்தறிதல் அத்துணை எளிதன்று. செங்கழுநீர்ப் பூவே செங்குவளை எனப் பட்டது.

தண் கயக்குவளை —குறிஞ் 63.

பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர் மதுரை 566

என்ற அடிகளுக்கு முறையே நச்சினார்க்கினியர் குளிர்ந்த குளத்திற் பூத்த செங்கழுநீர்ப்பூ எனவும், பெரிய பலவாகிய செங்கழு நீரில் சுரும்புகளுக்கு அலர்கின்ற பல பூக்களையும் எனவும், உரை கூறு வாராயினர். இங்ஙனமே,

நீர்தரு மகளிர்க் குற்ற குவளையும் புற. 42

தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள்வரும் புற. 116

என வருவனவற்றுள் குவளை என்பதற்குச் செங்கழுநீர் என்றே புறநானூற்றுரையும் பகர்கின்றது. ஒரு சிலர் செங்கழுநீரும், செவ்வாம்பலும் ஒன்றென்பது பொருந்தாது. பாரத்துவாசி ஆசிரியர் நச்சினார்க்கினியர் குவளையென்பதற்குச் செங்கழு நீர் என்று உரை கூறியதுபோலவே, கழுநீர் என்றவிடங்களில் (மதுரை 171; 551; சிறுபா 42) செங்கழுநீர்ப் பூவென்றும், ஆம்பலெனுஞ் சொல் பூவைக் குறிக்குமிடத்து (குறிஞ், 62, பட்டி. 66 கலி. 75; சீவக. 2336; 2652) ஆம்பற் பூவென்றும் உரை கண்டனர். அன்றியும்,

தொடர்ந்த குவளைத் தூநெறி அடைச்சி
அலர்ந்த ஆம்பல் அகமடி வையர் —பதி--27

ஒண்செங் காந்தள் ஆம்ப லனிச்சந்
தண்கயக் குவளை குறிஞ்சி —குறிஞ் 62–3

என்றவிடங்களில் குவளையும் ஆம்பலுந் தனித்தனி உரைக்கப்படுதல் நோக்கத்தக்கது. குவளையில் கருங்குவளையென்பதொன்றுண்டு. இதனைப்பற்றிப் பின்னர் அறியலாம்.

ஆம்பல், தாமரை, செங்குவளை முதலிய மலர்கள் அவற்றின் இலைமட்டத்திற்குச் சற்று உயர வளர்ந்து பூக்கும் இயல்பின. இவற்றுள் குவளைப் பூ இவ்வாறு மலர்தலை,

கடவுட் கற்சுனை அடையிறந் தவிழ்ந்த
பறியாக் குவளை மலரொடு நற். 34

இவ்வடிகள் உணர்த்தும். இவற்றின் அகவிதழ்கள் பூவின் நடுவே வரவரச் சிறுகி கேசரங்களாக மாறும். தாது முற்றிய கேசரங்கள் (Stamens) ஆம்பலிலும் கழுநீர்ப்பூவிலும் மிகுதியாக உள்ளன. இப் பூக்களில் ஒரு சிறிது நறுமணமுண்டு. குவளையின் மணத்தைத் தலைமகளின் கூந்தல் மணத்திற்கும், ஆம்பலின் மணத்தை அவளது வாய் மணத்திற்கும் உவமிக்கும் ஒரு குறுந்தொகை, பின் வருமாறு:

குவளை நாறுங் குவையிருங் கூந்தல்
ஆம்பல் நாறுந் தேம்பொதித் துவர்வாய் குறுந். 300

விடியற் காலையில் பூக்கும் இப்பூக்களை வண்டு மொய்த்துத் திறக்கும் என்பதை,

பொய்கை யாம்பல் அணிநிறக் கொழுமுகை
வண்டுவாய் திறக்கும் தண்டுறை யூரன் குறு. 370

கன்னி விடியல் கணைக்கா லாம்பல்
தாமரை போல மலரு மூர —ஐங். 68

என்பனவற்றிற் காணலாம்.

இவற்றில் வண்டு மொய்ப்பதற்குக் காரணம் மலரின் அழகுடன், வீசுகின்ற மணமும், பிலிற்றுகின்ற தேனுமாகும். இதனல் இப்பூக்கள் பிற மகரந்தச் சேர்க்கையைப் (Cross-Pollination) பெற்றுச் சினை முற்றிக் காய்க்கின்றன.

கரும்பு நடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்பு பசி களையும் பெரும்புன லூர ஐங். 65

என்பதால் ஆம்பற் பூவில் வண்டினம் உணவு பெறுமென்பதும்,

பெரும்பல் குவளைச் சுரும்புபடு பன்மலர்
திறந்து மோந்தன்ன சிறந்து கமழ்நாற்றத்து மது. 566-7

என்பதால் குவளை மலரின் நறுமணம் சுரும்பினை யீர்க்கு மென்பதும் பெற்றும்.

வேங்கைப் பூவிற்குரைத்தவாறு போலப் பதிற்றுப்பத்தில் அருவியாம்பல் என்ற சொற்றொடர் அறுபத்து மூன்றும் பாட்டின் பெயராயிற்று. இங்கு ஆம்பலென்பது பேரெண்ணைக் குறித்தது. இங்ஙனமே இருபத்தேழாம் பாடல் தொடர்ந்த குவளை என்னும் பெயர்த்தாயிற்று.

மணிமேகலையில் முரண்பட்ட செய்தியா?

(மயிலை. சீனி. வேங்கடசாமி)

மணிமேகலை என்னும் காவியத்திலே, அதன் ஆசிரியராகிய கூல வாணிகன் சாத்தனார், சரித்திர சம்பந்தமாக முரண்பட்ட செய்தியைக் கூறியுள்ளதாகத் திருவாளர்கள் S. வையாபுரிப் பிள்ளையும், K. A. நீலகண்ட சாஸ்திரியும் எழுதியிருக்கிறார்கள். கூலவாணிகன் சாத்தனார் சங்கப் புலவர், பௌத்த மதத்தவர், பௌத்த மத தத்துவங்களையும் பௌத்த சரித்திரத்தையும் நன்கு அறிந்தவர். இத்தகைய அறிஞர் தாம் இயற்றிய மணிமேகலை என்னும் காவியத்தில் முரணான செய்திகளைக் கூறுவாரா?

திரு. வையாபுரிப் பிள்ளையும், திரு. நீலகண்ட சாஸ்திரியும் சென்னைப் பல்கலைக் கழகத்திலே முறையே தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும், சரித்திர ஆராய்ச்சித்துறைத் தலைவராகவும் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருந்தவர்கள். தம்மிடம் பயின்ற மாணவர்களுக்கு ஆராய்ச்சித்துறையில் வழிகாட்டியவர்கள். இவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்கள். தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிலும் தமிழ்நாட்டு வரலாற்று ஆராய்ச்சியிலும் ஒருவரை ஒருவர் பின்பற்றிச் செல்கிறவர்கள். இப்பெரியார்கள் கூறுகிறார்கள்—மணிமேகலையிலே

84-ஆம் பக்கத் தொடர்ச்சி.

பூக்கள் முகையவிழ்ந்து மலருங்கால் இதழ்கள் இயங்குகின்றன. தாவரங்களின் இவ்வுடலியல் (Physiological) நிகழ்ச்சியால் சிறிது சூடுண்டாகும். இச்சூட்டினைத் தாவர உடலியற் பகுதி விரித்துரைக்கும். இதனை மதுரை மருதனிளநாகனார் "வயல் வெள்ளாம்பல் சூடுதரு புதுப்பூ" என எடுத்தியம்புகின்றார்! இப்பூக்களைக்கொய்து மகளிர் சூடிக்கொள்ளுதலும், அகவிதழ்களைத் தொடுத்து, மடிவை—தழையென்னும் ஆடையாக்கி யணிதலும், இலைகளைப் பறித்துத் தழையுடை கொள்ளுதலும் தமிழிலக்கியத்திற் கூறப்படுகின்றன.

அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு
ஈர்ந்தண் எருமை — அக. 316

கழுநீர் மேய்ந்த கருந்தா ளெருமை — நற். 260

என்பனவற்றால், ஆம்பலையுங் கழுநீரையும் எருமை மேய்தல் காணலாம். மாலைப் பொழுதில் ஆம்பல் குவியுமென்பதையும் குறிஞ்சிக் கபிலர்,

ஆம்பல் ஆயிதழ்க் கூம்புவிட வளமனைப்
பூந்தொடி மகளிர் சுடர்தலைக் கொளுவி
அந்தி யந்தணர் அயர — குறிஞ். 224-226

என்ற அடிகளிற் குறிப்பிடுகின்றார்.

சாத்தனுர் முரண்பட்ட செய்திகளைச் கூறுகிருர் என்று. இவர்கள் கூறுவதுபோல, மணிமேகலைக் காவியத்தில் முரண்பட்ட செய்தி உண்டா என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டுவது தமிழரின் கடமை அல்லவா? இதனை ஆராய்வோம்.

தமது "இலக்கிய மணிமாலை" என்னும் நூலிலே வையாபுரிப் பிள்ளை அவர்கள் இவ்வாறு எழுதுகிருர்:

"மேலும் கோவலனும் கண்ணகியும், புத்ததேவன் கபிலவாஸ்து வில் அவதரித்துச் செய்யும் தருமோபதேசத்தைக் கேட்டு வீடு அடைவார்கள் என்று மாசாத்துவான் கூறியதாகச் சாத்தனுர் மணி மேகலையில் (XXVIII-141-146) எழுதினர். புத்தர் தோன்றுவ தற்கு முற்பட்ட காலத்திலேயே கோவலன் முதலியோர் வாழ்ந்தன ரென்பது இவர் கொண்ட கதை. இது முன்பின் முரண். இச் சாத்தனுர் இவர்களது காலத்தினர் என்று கொள்ளுவது எத்தனை அசம்பாவிதம்! இவரைச் சங்கப் புலவர் அல்லரெனக் கொள்ளுதற்கு மேற்காட்டியன தக்க சான்றுகளாகும். இங்ஙனமாக, இளங்கோவடி களும் கூலவாணிகன் சாத்தனுரும் பிற்பட்ட காலத்தவரே யாவர்". (பக்கம் 136.)

வையாபுரிப் பிள்ளை தாம் எழுதிய "தமிழ் மொழி—தமிழ் இலக் கிய வரலாறு" என்னும் ஆங்கில நூலிலும் இதே கருத்தை எழுதி யுள்ளார். (History of Tamil Language and Literature-1956)

"கோவலனும் கண்ணகியும் புத்தர் காலத்துக்குப் பல தலை முறைக்கு முன்னே இருந்தவர்கள் என்று மணிமேகலைக் காவியம் கூறுகிறது. (XXVIII 141-146) மதுரை நகரத்தை அழித்ததனுல் தனக்கு ஏற்பட்ட பாவத்தைப் போக்குவதற்குக் கண்ணகி கோவல னுடன் இவ்வுலகத்தில் பல பிறப்புக்கள் பிறந்து கடைசிப் பிறப்பிலே புத்தருடைய தருமோபதேசத்தைக் கேட்டு வீடுபேறடையப் போவ தாகத் தெய்வ உருவமடைந்த கண்ணகி மணிமேகலையிடம் கூறுகிருர். இதனுல் கண்ணகியும் கோவலனும் சரித்திரத் தொடர்புடைய ஆட்கள் அல்லர்".

"Kannagi as deity informs Manimekalai that to expiate her sin of destroying Madurai, she and Kovalan would be undergoing births and deaths for generations together in this world and at long last they would hear the dharmic word from the mouth of Buddha himself and then they would get the final release. These statements clearly show that Kannagi and Kovalan are not historic figures." (Page 146)

பிள்ளையவர்கள் கூறிய இதே செய்தியைத்தான் இவருடைய நண்பரான திரு. நீலகண்ட சாஸ்திரியும் கூறுகிருர். "சிலப்பதிகார

மணிமேகலை காலம்" என்னும் ஆங்கிலக் கட்டுரையிலே சாஸ்திரியார் கூறுவது வருமாறு:

"கபிலவாஸ்து நகரத்தில் புத்தர் உபதேசம் செய்யும்போது கோவலனும் கண்ணகியும் அவ்வுபதேசத்தைக் கேட்டு மோட்சம் அடைவார்கள் என்றும், தானும் அவ்வமயம் அங்கு இருப்பார் என்றும் கோவலனுடைய தந்தை மணிமேகலையிடத்தில் கூறியதாக மணிமேகலைக் காவியம் கூறுகிறது. இவ்வாறு கூறுவதனால் இக் காவியங்களின் ஆசிரியர்களும் காவியத் தலைவனும் காவியத் தலைவியும் சேரன் செங்குட்டுவனும் சரித்திர புருஷர்கள் என்றும் அவர்கள் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்றும் கனவுகூடக் காண முடியுமா?

"Manimekalai (XXVIII 141-146) makes the father of Kovalan say that Kovalan and Kannaki will be present at the Buddha's preaching in Kapilavastu and attain release and that he too would be there at the time. Is it possible after this to dream of treating the authors of the epics, the hero and heroine of the poems and the Cera monarch Cenkuttuvan as historical contemporaries?" (University of Ceylon Review Vol. VII (1949) . 21-27)

இவ்வாறு ஒரே பல்கலைக் கழகத்தில் இருந்த இரண்டு பேராசிரியர்களும் கூறுகிறார்கள். முழு உண்மைபோலத் தோன்றுகிற இவர்கள் கூற்று சரியானதுதானா, ஏற்றுக்கொள்ளக்கூடியதா என்பதை ஆராய்வோம். ஆராய்வதற்கு முன்னர், இவர்கள் காட்டுகிற மணிமேகலை நூலின் வாசகத்தைத் தெரிந்துகொள்வோம்.

கோவலன் தந்தையாகிய மாசாத்துவான், மணிமேகலையை வஞ்சிமாநகரத்திற் கண்டபோது, அவர் அவளிடம் இவ்வாறு கூறுகிறார்:

"இன்னுங் கேளாய், நன்னெறி மாதே!
தீவினை உறுப்பச் சென்றநின் தாதையும்
தேவரிற் றோற்றிமுற் செய்தவப் பயத்தால்
ஆங்கத் தீவினை இன்னுந் துய்த்துப்
பூங்கொடி! முன் அவன் போதியின் நல்லறம்
தாங்கிய தவத்தால் தான் தவம் தாங்கி
காதலி தன்னொடு கபிலையம் பதியில்
நாதன் நல்லறம் கேட்டுவீ டெய்துமென்று
அற்புதக் கிளவி அறிந்தோர் கூறச்
சொற்பயன் உணர்ந்தேன், தோகை! யானும்
அந்நாள் ஆங்கவன் அறநெறி கேட்குவன்"

(கச்சிமாநகர் புக்க காதை 137-147)

மணிமேகலை வஞ்சிமாநகரத்திற்குச் சென்று பத்தினிக்கோட்டத்தில் தெய்வமாக இருந்த கண்ணகியாரைக் கண்டு வணங்கியபோது கண்ணகியார் மணிமேகலைக்கு இவ்வாறு கூறுகிறார் :

"நீங்கரும் பிறவிக் கடலிடை நீந்திப்
பிறந்தும் இறந்தும் உழல்வோம் பின்னர்
மறந்தும் மழைமரு மகதநன் னாட்டுக்
கொருபெருந் திலகமென் றுரவோ ருரைக்குங்
கரவரும் பெருமைக் கபிலையம் பதியில்
அளப்பரும் பாரமிதை அளவின்றி நிறைத்துத்
துளக்கமில் புத்த ஞாயிறு தோன்றிப்
போதி மூலம் பொருந்திவந் தருளி
* * * * * *
அண்ணல் அறக்கதிர் விரிக்குங் காலைப்
பைந்தொடி தந்தை யுடனே பகவன்
இந்திர விகாரம் ஏழுமேத் துதலிற்
றுன்பக் கதியில் தோற்றர வின்றி
அன்புறு மனத்தோடு அவனறங் கேட்டுத்
துறவி யுள்ளந் தோன்றித் தொடரும்
பிறவி நீத்த பெற்றியம் ஆகுவம்"

(வஞ்சிமாநகர் புக்க காதை 40–59)

இதிலே, கோவலனும் கண்ணகியாரும் மீண்டும் மீண்டும் பல பிறப்புகள் பிறந்து வாழ்வார்கள் என்றும், கடைசியில் புத்தருடைய உபதேசங்களை நேரில் அவர் வாய்மொழியாகக் கேட்டுத் தெளிந்து வீடுபேறடைவார்கள் என்றும் கூலவாணிகன் சாத்தனார் ஐயமில்லாமல் தெளிவாகக் கூறுகிறார்.

கபிலவாஸ்து நகரத்திலே கௌதமர் புத்தர் பிறந்து போதி ஞானம் பெற்று உலகத்தில் உபதேசம் செய்து மறைந்துபோய் இற்றைக்கு 2500 ஆண்டுக்குமேலாய்விட்டது. அப்படியிருக்க, கோவலனும் கண்ணகியும் மாசாத்துவானும் புத்தருடைய உபதேசத்தை இனிமேல் கேட்கப்போவதாக மணிமேகலைக் காவியத்தில் கூலவாணிகன் சாத்தனார் கூறுகிறார். இவருக்குச் சரித்திரம் தெரிந்திருந்தால், கௌதம புத்தரின் வரலாற்றை அறிந்திருந்தால், இவ்வாறு முன்னுக்குப்பின் முரண்படக் கூறமாட்டார். ஆகவே இது சரித்திரத்துக்கு மாறுபட்ட கட்டுக்கதை, பொய்க்கதை என்று திரு. பிள்ளையும் திரு. சாஸ்திரியும் கூறுகிறார்கள். இப்பல்கலைக் கழகப் பேராசிரியர்கள் கூறுவது உண்மைபோலத் தோன்றுகிறது. ஐயமில்லாமல், முழு உண்மைபோலக் காணப்படுகிறது. ஏற்றுக் கொள்ளவேண்டிய, மறுக்கமுடியாத உண்மை போலத் தெரிகிறது.

ஆனல், பௌத்தராக வாழ்ந்து பௌத்தமதத் தத்துவங்களை நுட்பமாக ஆராய்ந்து அறிந்த கூலவாணிகன் சாத்தனர்—பௌத்த மதப் பிரசாரத்துக்காகவே மணிமேகலைக் காவியத்தை இயற்றிய சாத்தனர்—தமது காலத்துக்குப் பல நூற்றுண்டுகளுக்கு முன்னமே கௌதமபுத்தர் வாழ்ந்து மறைந்துவிட்டார் என்னும் சாதாரண உண்மையையும் அறியாதவரா? அவர் கௌதம புத்தரின் வரலாற்றினை அறியாதவரா? புத்தர் பெருமான் இனிப் பிறந்து உபதேசம் செய்யும்போது கோவலனும் கண்ணகியும் மாசாத்து வானும் அவ்வற நெறியைக் கேட்டறிந்து வீடுபேறடைவார்கள் என்று சாத்தனர் கூறியதன் கருத்து என்ன?

இதைக் கருதும்போதுதான் எங்கேயோ ஏதோ தவறு இருக்கிறது என்பது புலனுகிறது. இங்குத்தான் ஆராய்ச்சியாளர்கள் பகுத்தறிவைச் சரியாகச் செலுத்திக், காய்தல், உவத்தல் இன்றி நடுநிலையில் நின்று ஆராயவேண்டி யிருக்கிறது.

"எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்றும்

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்றும் அறிவுடைமைக்கும் மெய்யுணர்தலுக்கும் திருவள்ளுவர் விளக்கங் காட்டுகிருர். அவ்வழியில் நின்று இதன் உண்மையை ஆராய்வோம்.

பிள்ளையவர்களும் சாஸ்திரியவர்களும் கூறுவது உண்மைதான், சாத்தனர் வரலாற்றுக்கு முரண்பட்ட செய்தியைத்தான் கூறியுள்ளார் என்று எல்லோரும் கருதுவார்கள்; ஆனல், ஆழ்ந்து நோக்குவோருக்குச் சாத்தனர் கூறியதில் முரண்பாடு தோன்ருது. இதன் உண்மையைக் கண்டறிய தமிழ் அறிவும் சரித்திர அறிவும் மட்டும் இருந்தாற் போதாது. சாத்தனர் இவ்விடத்தில் கூறுவது பௌத்தமத சம்பந்த மான ஒரு செய்தி. ஆகவே, பௌத்தமத ஆராய்ச்சியுடையவர் களுக்குத்தான் இவர் கூறியதன் பொருள்—உண்மையான மெய்ப் பொருள் நன்கு விளங்கும். ஏனையோருக்கு விளங்கவே விளங்காது. திரு. பிள்ளையும் திரு. சாஸ்திரியும் பௌத்த சமய சம்பிரதாயத்தை யறியாமல், இப்பகுதியை ஆராய்ந்தபடியால் பிழையான முடிவைக் கண்டார்கள். பௌத்த சம்பிரதாயம் அறியாதவர்களுக்கு இவர்கள் ஆராய்ச்சி முழு உண்மை போலத்தான் தோன்றும். ஆனல் உண்மை அதுவன்று, அப்படியானல் உண்மை எது?

எதிர் காலத்திலே ஒரு புத்தர் இனிப் பிறக்கப்போகிருர் என்று பௌத்தர்களுக்குள் ஒரு நம்பிக்கை உண்டு. நமது பாரத நாட்டிலே இன்னொரு புத்தர் பிறந்து அறவுரைகளைப் போதித்து பௌத்த மதத்தை நிலைநாட்டப்போகிருர் என்பது நமது நாட்டுப் பௌத்தர்

களின் கொள்கை. இது போலவே, கண்ணபிரான் (கிருஷ்ணன்) எதிர் காலத்திலே இவ்வுலகத்திலே பிறந்து ஜைன (சமண) மதத்தை நிலைநாட்டப்போகிருர் என்பது சமண சமயக்கொள்கை. இந்தக் கொள்கையைத்தான் கூலவாணிகன் சாத்தனுர் தமது மணிமேகலை யிற் கூறினுர். சாத்தனுர் இவ்விடத்திற் கூறியது, பிறந்து வாழ்ந்து மறைந்துபோன கௌதம புத்தரை அல்ல. அவர் கூறியது இனி வரப்போகிற புத்தரை. இனி வரப்போகிற புத்தரை அநாக புத்தர் (பிறக்காத புத்தர்) என்று பௌத்தர்கள் கூறுவார்கள். இனி, எதிர் காலத்திலே ஒரு புத்தர் தோன்றி தர்மோபதேசம் செய்யும்போது கண்ணகியும் கோவலனும் மாசாத்துவானும் அவ்வுபதேசங்களைக் கேட்டு முத்தியடைவார்கள் என்று சாத்தனுர் கூறியதில் என்ன முரண்பாடு இருக்கிறது?

ஆராயவேண்டிய முறைப்படி ஆராய்ச்சி செய்யாமல், தவருன வழியிற் சென்று ஆராய்ந்தபடியால் இவர்களின் முடிவு தவருன முடிவாயிற்று. தங்களுடைய தவற்றினை உணராமல் சாத்தனுர்மேல் அறியாமைக் குற்றத்தைச் சுமத்தி, முன்னுக்குப்பின் முரணுகக் கூறினுர் என்று பழி கூறியதோடு மட்டும் நில்லாமல், கோவலன், கண்ணகி, சாத்தனுர், இளங்கோவடிகள், செங்குட்டுவன் ஆகிய இவர்கள் எல்லோரும் உண்மையில் இருந்தவர்கள் அல்லர், கற்பனை யாகக் கட்டிவிடப்பட்ட கற்பனைப் புருஷர்கள் என்றும் இந்த ஆராய்ச்சி யாளர்கள் எழுதிவிட்டார்கள். முதற் கோணல் முற்றுங்கோணல்.

இவர்கள் மேற்கோள் காட்டிய மணிமேகலைப் பகுதிக்கு இவர்கள் தவருகப் பொருள் செய்ததுதான் முதற் கோணல், பௌத்த சம்பிர தாயத்தை அறியாத காரணத்தினுலே, எதிர்காலப் புத்தரை இறந்த காலப் புத்தராக (கௌதம புத்தராக)க் கருதிக் கொண்டது இவர்கள் ஆராய்ச்சியில் முதற் பிழையாகும். பௌத்த சம்பிரதாயப்படி இதற் குப் பொருள் கூறுகிறவர்கள், இனி தோன்றப்போகிற புத்தர் என்று பொருள் கூறுவார்களே தவிர, மறைந்துபோன கௌதம புத்தர் என்று பொருள் கொள்ளமாட்டார்கள்; பொருள்கொள்ளக் கூடாது. அப்படிப் பொருள் கொள்வது தவறு. எனவே, சாத்தனுர் கருதிய பொருளுக்கு மாருகப் பொருள் கொண்டபடியினுலே, பிள்ளை யும் திரு. சாஸ்திரியும் தமது ஆராய்ச்சியில் தவறு செய்துவிட்டார்கள். அந்தத் தவறு காரணமாக அவர்களின் ஆராய்ச்சி முடிவும் தவருன முடிவாய்விட்டது. இவர்களின் தவருன முடிவை அறிஞர்கள் எவ் வாறு ஏற்றுக்கொள்ள முடியும்?

பௌத்த மதக்கோட்பாடுகளை நன்கறிந்தவர்கள் சாத்தனுரின் மணிமேகலைக் காவியத்திலே சரித்திர முரண்பாட்டைக் காணமாட்டார் கள். "முன்பின் மலையா மங்கல மொழி" என்று சாத்தனுரே கூறுகிறபடி, முன்னுக்குப்பின் முரண்பட்ட செய்தியோ, மாறுபட்ட கருத்துக்களோ சாத்தனுரின் மணிமேகலையிற் காணப்படவில்லை. புத்தர் சரித்திரத்துக்கு மாறுபட்ட வரலாற்றையும் சாத்தனுர் கூற

வில்லை. ஆராய்ந்து பார்க்கவேண்டிய முறைப்படி, ஆராய்ந்து பார்க்காமல், தவறான முறையில் ஆராய்ந்த படியினாலே பிள்ளையவர்களும் சாஸ்திரியவர்களும் தவறான முடிவுக்கு வந்தார்கள். புத்தர் என்னும் சொல்லுக்குக் கௌதம புத்தர் என்று தவறான பொருள் கொண்ட படியினாலே அவர்கள் தமது ஆராய்ச்சியில் பிழையான முடிவைக் கண்டார்கள். அது பெரும் பிழையான முடிபு. அவர்களைப்போல மேற்போக்காக ஆராய்கிறவர்களுக்கு அவர்கள் ஆராய்ச்சி முடிபு உண்மை போலக் காணப்பட்டாலும், அவை தவறான முடிபுகளே; தள்ளத்தக்க முடிபுகளே; கொள்ளத்தக்கவை அல்ல.

சாத்தனார் மணிமேகலையில் முன்னுக்குப்பின் முரணாகக் கூற வில்லை; முரண்படாமல் சரியாகவே கூறியுள்ளார் என்பது நன்கு விளக்கப்பட்டபடியால், பிள்ளையவர்கள் கொண்ட முடிபு தவறுகிறது. தம்முடைய பிழையுள்ள தவறான முடிபை வைத்துக்கொண்டு, இளங்கோ அடிகளும் சாத்தனாரும் பிற்பட்ட காலத்தவர் என்று அவர் கூறியது ஏற்கத் தக்கதல்ல. கண்ணகியும் கோவலனும் சரித்திரத் தொடர்புடைய ஆட்கள் அல்லர் என்று அவர் எழுதியதும் தவறுகிறது. எனவே, இவரது கருத்து தள்ளப்படவேண்டியதாகும். இதனால், கோவலனும் கண்ணகியும் சரித்திரத் தொடர்புடைய ஆட்கள் என்பதும் அவர்கள் உண்மையில் உலகத்திலே வாழ்ந்திருந்தனர்கள் என்பதும் தெளிவாக விளங்குகிறது.

சாத்தனார் சரித்திரத்துக்கு மாறாகக் கூறவில்லை. வரலாற்றுக்கு ஏற்றபடியே கூறியுள்ளார் என்பது விளக்கப்பட்டபடியால், நீலகண்ட சாஸ்திரியாரின் ஆராய்ச்சி முடிவும் பகற்கனவாய்ப் பலனில்லாமற் போயிற்று. "மணிமேகலை ஆசிரியரும் சிலப்பதிகார ஆசிரியரும் காவியத் தலைவர்களாகிய கோவலனும் கண்ணகியும் சேரன் செங்குட்டுவனும் சரித்திர புருஷர்கள் என்றும், இவர்கள் ஒரே காலத்தில் இருந்தவர்கள் என்றும் கனவுகூடக் காண முடியுமா?" என்று நீலகண்ட சாஸ்திரியார் பௌத்தமத சம்பிரதாயத்தை அறியாமல் ஆராய்ந்து முடிவுகூறியது பொருளற்ற வீண்கேள்வியாய்விட்டது. சாத்தனாரும் இளங்கோவடிகளும் கோவலனும் கண்ணகியும் சேரன் செங்குட்டுவனும் சரித்திர புருஷர்கள்தாம், உலகத்தில் உயிர் வாழ்ந்திருந்தவர்கள் தாம் என்னும் உண்மை ஐயத்துக்கிடமில்லாமல் தெளிவாய்த் தெரிகிறது.

வையாபுரிப் பிள்ளையும் நீலகண்ட சாஸ்திரியாரும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக இருந்தும், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் நாட்டுச் சரித்திர வரலாறுகளைப் பொறுத்தவரையில், இதுபோன்ற தவறான ஆராய்ச்சிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அவற்றையும் பின்னர் விளக்கிக் கூறுவோம்.

சிற்றிலக்கியம்: 1.

காதல்

மது. ச. விமலானந்தம், எம்.ஏ.,
சரபோசி அரசர் கல்லூரி, தஞ்சாவூர்.

காதல் என்றதும் இற்றை நாளில் மக்கள் மனதில் ஒருவிதக் கசப்பும் வெறுப்பும் தோன்றக் காண்கின்றோம். காதல் என்பது என்ன? கள்ளமில் உள்ளத்தில் தோன்றும் அன்பு உணர்ச்சியே—அன்பின் முதிர்வே—காதல்; உணர்வும் அறிவும் ஒன்றிய நிலையே காதல் எனலாம். தாய், தந்தை, உடன்பிறந்தார் மாட்டு உண்டாகும் காதல் ஒருவகை. மக்களிடத்து உண்டாகும் அன்பு நிலை ஒருவகைக் காதல். மனைவிபால் தோன்றும் அன்பு வேறு நிலையது. இங்ஙனம் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது அன்பே! அந்த அன்பு நிலையிலே சிற்சில வேறுபாடு, அவ்வளவே. வேறுபாடு உண்டு; ஆனால் வேற்றுமை இல்லை. எனினும் ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டு, இன்னதென எடுத்தியம்ப இயலாத ஓர் இன்ப நிலை எய்துகின்றனர்—இந்நிலையையே நாம் பெரிதும் காதல் எனக் கொள்கின்றோம்.

இவ்வன்பு பிறவிதோறும் தொடர்ந்து வரும் என்பது பண்டு தொட்டுப் பெரியோர்கள் கொண்டுள்ள நம்பிக்கை. இவ்வாறு வரும் அன்பே நல்லூழின் காரணமாகத் தலைவனையும் தலைவியையும் கூட்டுவித்து ஒன்றுபடுத்துகின்றது என்பர். இதனைச் சங்கப் பாடல்கள் செப்பமுற விளக்குதல் காண்க.

முன்பின் அறியாத தலைவனும் தலைவியும் எதிர்ப்படுகின்றனர். ஊழ்வினை காரணமாக அவர்களையுமறியாது அன்பு கொள்கின்றனர். நீண்டநாள் பழகியவரிடத்தும் உண்டாகாத தலையாய நிலையாய தனியன்பு இவ்விருவரிடையே எழுகின்றது. 'இப்பரந்த உலகில் எத்தனையோ எழிலரசிகளைக் காண்கின்றோம்; ஆனால் இவள் மாட்டு மட்டும் இத்தகைய அன்பு தோன்றக் காரணம் யாது?' என வியக்கின்றான் தலைவன். "என்னுடைய தாயும் நின்னுடைய தாயும் என்ன உறவுடையார்? ஒருறவுமிலரே! என் தந்தையும் நின் தந்தையும் எவ்வகையிலேனும் நட்போ, உறவோ, உடையரோ என்றால் அதுவுமில்லை; அட, அதுதான் போகட்டும். நாமாவது முன்பின் பழக்கமுடையோமா—அதனால் நட்புண்டாக, என்றால் அதுவுமில்லையே! இங்ஙனமிருக்க, செம்மையான நிலத்தின்கண் பெய்தநீர் அந்நிலத்தோடு ஒன்றி இயைவது போல் நம்மிருவருடைய இதயங்களும் இரண்டறக் கலந்தனவே; இஃதென்னே! என வியக்கின்றான் தலைவன்.

யாயும் ஞாயும் யாரா கியரோ ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர் ?
யானும் நீயும் எவ்வழி அறிதும் ?
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே !
(குறுந்தொகை—40)

இவ்வுவமையினைக் கடந்து ஒப்பில் கபிலன் ஓர் உவமையைத் தீட்டுகின்றான். எங்கோ ஒரு தடாகத்தில் தாமரை பூக்கின்றது; எங்கோ ஒரு காட்டில் சந்தன மரம் வளர்கின்றது. இயற்கையின் விந்தையால் இவ்விரண்டும் ஒன்று சேர்கின்றனவாம். இரண்டின் தாதையும் ஒருங்கு சேர்த்து ஒரு தேன் கூட்டை அந்தச் சந்தன மரத்தில் கட்டுகின்றது வண்டு. இவ்வாறுதான் எங்கோ, எவருக்கோ பிறந்த தலைவனும் தலைவியும் ஊழ்வினையால் ஒன்றிய உள்ளத்தினராகின்றனராம்.

தாமரைத் தண்தா(து) ஊதி மீமிசைச்
சாந்தின் தொடுத்த தீந்தேன் போல
(நற்றிணை—1

தலைவன் தலைவியரிடையே மறைந்திருந்த 'காதல்' தக்க பருவத்து ஞாயிற்றைக் கண்ட தாமரை போன்று மலர்கின்றது; ஊழால் கூட்டப்பட்டார் எதிர்ப்படுங்கால் வெளிப்படுகின்றது. கண்டதும் காதல் கொண்டு (Love at first sight) பண்டைய மனவுறுதியும், எத்தகைய துன்பத்தையும் தாங்கி இன்பம் காணும் வித்தக வலிமையும் பெறுகின்றனர். என்னே காதலின் சக்தி ! இந்நிலையைக் கன்னித் தமிழுக்குக் கலைக்கோயில் கட்டிய கம்பன் அழகாகச் சித்திரிக்கின்றான் பாருங்கள் :

மிதிலைமாநகர் வீதிதனில் கோசிக மாமுனி முன்செல்ல, இளவல் இலக்குவன் பின் தொடர இலக்கிய நாயகன் இராமன் வருகின்றான். அழகின் எல்லை—அன்பின் உருவாம் சிறையிருந்த செல்வி—சீதை கன்னிமாடத்து உப்பரிகை மீது நிற்கின்றாள். ஒருவரை யொருவர் கண்டுவிட்டனர்...... நிகழ்ந்ததுதான் என்ன? அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள். கண்களும் கண்களும் கலந்தன. கண்ணும் கண்ணும் கலந்த நிலையிலே காதல் பிறந்ததாம்; ஒன்றையொன்று உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றினவாம்.

எண்ணரு நலத்தினாள் இனையள் நின்றுழிக்
கண்ணொடு கண்ணினைக் கவ்வி ஒன்றையொன்று
உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்.
(பால-மிதிலை 35)

இத்தகைய காதல் வாழ்வின் காட்சியினையும் மாட்சியினையும் வகுத்தும் தொகுத்தும் துறைபல அமைத்தும் அகப்பொருளென நெறிப்படுத்தினர் பண்டைத் தமிழர். அங்ஙனம் அமைந்தனவே தற்போது நமக்குக் கிடைக்கும் பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும் ஏனைய பிறவும். இக்காதலின்பம், புறத்தே இஃதென எடுத்துரைக்க இயலாது அகத்தே நுகர்ந்து இன்பமடைவதோர் பொருளாதலின் இதனை அகப்பொருள் என்றனர். மண வினைக்கு முற்பட்ட ஒழுக்கத்தினைக் களவு என்றும், மணவினைக்கும் பிற்றை ஞான்று நிகழும் ஒழுக்கத்தினைக் கற்பு என்றும் இருவகைப் படுத்துவர்.

களவாவது அடுப்பாரும் கொடுப்பாருமின்றித் தலைவனும் தலைவியும் தாமே அன்பு பூண்டு பிறரறியாது மறைந்தொழுகுவதாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே பிற்காலத்துத் காதல் சிற்றிலக்கியங்கள் தோன்றலாயின. சங்கப் பாடல்கள் யாவும் காதல் வாழ்வு நிகழ்ச்சிகளை, சிற்சில கூறுகளை, மட்டும் கூறும் சொல்லோவியங்களாகும்; ஆனால் காதல் பிரபந்தங்களோ ஆதி முதல் அந்தமீறாகக் கூறும் சிறுகாப்பியங்களாகும்.

இங்ஙனம் அகப்பொருளை அடிப்படையாக—காதற் சுவையை நிலைக்களனாகக்—கொண்டு காதல் சிற்றிலக்கியங்கள், காதல் என்ற தலைப்பிலே தோன்றிய தனிச்சிறப்பு தமிழ் மொழிக்கே உரிய ஒன்றாகும்.

இங்ஙனம் தோன்றிய காதல் சிற்றிலக்கியங்கள் சில தெய்வங்கள் மீதும், சில குறுநில மன்னர்கள் மீதும், சில சான்றோர்கள் பற்றியும் பாடப்பெற்றனவாக அமைந்துள்ளன. தெய்வங்கள் மீது பாடப் பெற்றன: "திருமலைக் கறுப்பன் காதல்" "பழநிக் காதல்" என்பன வாகும். இராசவல்லிபுரத்து வள்ளல் முத்துசாமிப் பிள்ளை பற்றி அழகிய சொக்கநாத பிள்ளை செய்த 'முத்துசாமிப் பிள்ளை காதல்'; கொங்குநாட்டுப் பழைய கோட்டைப் பெருநிலக்கிழாரான நல்ல தம்பி சர்க்கரை மன்றாடியார் மீது வீரபத்திர கவிராயர் பாடிய "மன்றாடியார் காதல்"; புறையார் வைரவ நாடாரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு சரவணப் பெருமாள் கவிராயர் புனைந்த "வைரவ நாடார் காதல்"; மதுரைப் பிள்ளை மீது இராமசாமிக் கவிராயர் இயற்றிய "மதுரைக்காதல்"; சேதுபதி அமைச்சர் முத்து இருளப்பபிள்ளை மீது அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர்

இயற்றிய 'முத்திருளப்ப பிள்ளை காதல்'; செட்டிநாடு தந்த செந் தமிழ்ச் செல்வர்—தமிழ்ப் பெருவள்ளல்—பெத்தாச்சி செட்டியார்மீது பெரியசாமி சேர்வை பாடிய "கர்த்திரச மஞ்சரி"; இதுவன்றி "கன்னிவாடி ஜமீந்தார் காதல்" ஆகியன வள்ளல்கள் மீதும், பெரியார்கள் மீதும் பாடப்பட்டனவாகும். மற்றும் கவிதைத் திற னும் கற்பனா சக்தியும் அமைய பாரதியார் பாடிய "குயில்", பாட்டும் இவ்வகைக் காதற் பிரபந்தமெனவே கொள்ளத்தகும். ஐந்தறிவினதாய குயிலைப் பாட்டுடைத் தலைவியாகக் கொண்டு காதற் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய பாரதியின் திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது. (பட்டியல் பார்க்க).

காதல் இலக்கியங்கள் பல தோன்றி இருப்பினும் அவை பற்றிய இலக்கணம் ஏதும் எந்நூலிலும் கூறப்படவில்லை. சிற்றிலக்கியங் களின் இலக்கணம் கூறுவன பன்னிரு பாட்டியல், பிரபந்த தீபிகை, நவநீத பாட்டியல், வச்சணந்திமாலை, இலக்கண விளக்கப் பாட்டியல், இலக்கணக்கொத்து முதலியனவாம். இவை ஒன்றிலேனும் காதற் பிரபந்தம் பற்றிப் பேசப்படவில்லை, எனவே நாம் காதல் என்ற இதன் பெயரமைதியினின்றே இவற்றின் இயல்பையும் ஏற்றத்தை யும் அறிய வேண்டியவர்களாயுள்ளோம்.

பிற்காலப் புலவர்கள் கடவுள்மீதும், பெரியோர் மீதும் பாடிய பலவகை இலக்கியங்களை 96 வகையாகப் பாகுபாடு செய்தனர். ஆனால் இற்றை நாளில் நூற்றுக்கும் மேற்பட்டனவாகப் பிரபந்தங் கள் தோன்றியுள்ளமை கண்கூடு. இலக்கியங்கள் காலப்போக்கில் இலக்கண வரம்பைக் கடந்து தோன்றுவதும், பிற்கால இலக்கண ஆசிரியர் இவ்விலக்கியங்களுக்குப் புதுவதாக இலக்கணம் அமைப் பதும் வளருமொழி அனைத்திற்கும் உரியனவாகும். ஒல்காப் புகழ் தொல்காப்பியரும் புதுவதாகத் தோன்றும் இலக்கியங்களைத் தழுவிக் கொள்ள 'விருந்து' என்ற வகையினைக் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

விருந்தே தானும்
புதுவது கிளந்த யாப்பின் மேற்றே. (தொல். செய். 239)

அம்முறையிலே இலக்கண எல்லையைக் கடந்து தோன்றியனவற்றில் இக்காதல் சிற்றிலக்கியமும் ஒன்றாகும். கவிஞர்தம் கற்பனைக்குக் கங்கு கரையுண்டோ?

எண்.	பல்வகை இலக்கியத்தின் பெயர்.	பாடியோர்.	பாட்டுடைத் தலைவன்.
1	கூளப்ப நாயக்கன் காதல்	சுப்பிரதீபக் கவிராயர்	நாகம கூளப்ப நாயக்கன்
2	முத்துசாமிப் பிள்ளை காதல்	அழகிய சொக்கநாதப் பிள்ளை	இராசவல்லிபுரம் முத்துசாமிப் [பிள்ளை
3	மன்ருடியார் காதல்	வீரபத்திரக் கவிராயர்	பழையகோட்டை நல்லதம்பி சர்க் [கரை மன்ருடியார்
4	முத்திருளப்ப பிள்ளை காதல்	அட்டாவதானம் சரவணப் பெரு [மாள் கவிராயர்	சேதுபதி அமைச்சர் முத்திருளப்ப [பிள்ளை
5	வைரவ நாடார் காதல்	சரவணப்பெருமாள் கவிராயர்	புறையார் வைரவ நாடார்
6	கர்த்திரச மஞ்சரி	பெரியசாமி சேர்வை	செட்டிநாட்டுப் பெத்தாச்சி செட்டி [யார்
7	மதுரைக் காதல்	இராமசாமிக் கவிராயர்	மதுரைப் பிள்ளை
8	கன்னிவாடி ஜமீந்தார் காதல்	?	—
9	திருமலை கருப்பன் காதல்	?	—
10	பழனிக்காதல்	?	—
11	குயில் பாட்டு	சுப்பிரமணிய பாரதியார்	குயில்

(தொடரும்)

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

(*1860-ஆம் ஆண்டு XXI சட்டப்படி பதிவு செய்யப்பெற்றது*)

தமிழ் மொழியின் தனிமை, தொன்மை, எளிமை ஆய சிறப்புக்களை இந்நாடும் பிறநாடும் அறிந்து போற்றவும், தமிழ் நாடும் தமிழரும் சிறப்பாகத் தமக்குரிய பண்பாடு நாகரிகம் முதலிய பல்வகைத் துறைகளிற் பாரினிற் சிறக்கவும், பொது வாக ஒல்லும் வகையில் உலகநலம் பேணவும், தமிழ்த்தாயின் தண்ணருளால் 1911 மே 14ஆம் நாள் நம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் நிறுவப்பெற்றது.

நம் சங்கம் தமிழ் நலம் பேணும் தகுதிவாய்ந்த மொழித்துறை அறிஞர்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தும், கட்டுரை வரையச்செய்தும், "**தமிழ்ப் பொழில்**" என்னும் திங்கள் வெளியீட்டைத் தோற்றுவித்து அதனைப் பேணிப் புரந்தும் வருகின்றது.

தமிழ்நாட்டுத் திக்கற்ற பிள்ளைகள் சிலருக்கு ஒல்லுமளவிற்கு உண்டியும் உறையுளும் வழங்கிச் சிற்றுயிர்க் குற்ற துணையாம் கல்வியையும், உயிரினும் சிறந்ததாய ஒழுக்கத்தையும் அடையத் **திக்கற்ற மாணவரில்லம்** நிறுவித் தொண்டாற்றி வருகின்றது.

மேலும், 1916-ஆம் ஆண்டில், சங்கம் நிறுவிய துங்கன் திரு. வே. இராதா கிருட்டினப்பிள்ளையவர்கள் பேரால் ஒரு **தொடக்கப்பள்ளியையும்**, 1938-ஆம் ஆண்டு சங்க வெள்ளிவிழா நாளில் **கரந்தைப் புலவர் கல்லூரியையும்**, 1944-ஆம் ஆண்டில், தமிழைத் தம் உயிராகக்கொண்டு தமிழ் நலம் பேணிய தமிழவேள் திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் பேரால் **உயர்நிலைப் பள்ளியையும்** நிறுவித் தொண்டுசெய்து வருகின்றது.

பத்தாயிரக்கணக்கான தமிழ், ஆங்கில, பிறமொழி நூல்களைக்கொண்ட **நூல் நிலையத்துடன்** ஒரு **படிப்பகமும்** நடத்தி வருகிறது.

சங்கம் மேற்கொண்ட இப்பணிகள் பல்லாற்றானும் சிறக்க அன்பர்கள் உதவிசெய்ய வேண்டுகிறேம்.

தமிழ்ப் பொழில்.

இத் திங்களிதழினை எல்லாப் பொது நூலகங்களும் பயன்படுத்தலாமென சென்னைப் பொது நூலக இயக்குநரின் 8—1—57-ம் நாளைய R. C. 232 J 1/56 எண் உத்தரவில் மாவட்ட நூலக அதிகாரக் குழுவினர்க்கும், அவர்கள் வழி நகராட்சி, மாவட்டக் கழகங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. (Proceedings R. O. C. No. 232 J 1/56 dated 8—1—57 of the Director of Public Libraries, Madras.)

நூலகங்கள் நடத்திவரும் திருக்கோயில்களின் மேலதிகாரிகள், அவை களின் நிதி நிலைமை இடந்தருமாயின், "தமிழ்ப் பொழில்" இதழ்க்கு உறுப்பினராகலாமென சென்னை இந்து சமய, அறநிலைய மாநில ஆணையர் 7—11—56ம் நாளைய L. Dis. 29226/56 எண் உத்தரவில் அறிவிக்கப்பட்டிருக் கிறது. L. Dis. 29226/56 dated 7—11—56 of the Commissioner for Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras.

Regd. No. M. 4192.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

யாழ் நூல்—(விபுலானந்த அடிகள்) தடித்த தாள் ரூ.	...	18—00
தொல்-சொல்—தெய்வச்சிலையார் உரை	...	2—50
நெல்லை வருக்கக் கோவை	...	0—12
சித்தரந்தாதி	...	0—12
சுருதி வீணை	...	0—25
தமிழரசி குறவஞ்சி	...	0—62
பரத சாத்திரம்	...	1—00
கவியரசு நினைவு மலர்	...	1—00
சிவமும் செந்தமிழும்	...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம்	...	0—50
Garland of Tamil Poetry	...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்)	...	0—50
அப்பர் புகழ்மாலை	...	0—25
சுந்தரர் புகழ்மாலை	...	0—25
பாரதசார வெண்பா	...	1—00
தொல்-பொதுப்பாயிரம் உரை	...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)		1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,)	...	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை)	...	0—25
கட்டுரைப் பொழில் (அ. மு. சரவண முதலியார்)	...	2—50
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு (12 மலர்கள்)	...	4—00

'கரந்தைக் கட்டுரைக் கோவை'

கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடு.

சென்னைப் பல்கலைக் கழக (Pre-University) முன்னிலைப் பல்கலைக் கழகத் தேர்விற்குப் பாடமாக வைக்கப்பெற்றுள்ளது.

விலைக்குக் கிடைக்கும். விலை 1—75.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்.

		உள்நாடு.	மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகள்.
முன்பணம் ஆயுள் வரி	ரூ.	50 00	50 00
,, ஆண்டு வரி சங்க உறுப்பினர்க்கும் தலைமையாசிரியர் ஒப்பம்பெற்ற தனிப்பட்ட மாணவர்க்கும்		2 00	2 50
,, ,, ஏனையோருக்கு		3 00	3 50

Edited and Published by S. Swayamprakasam, B. A., B. L., Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T.V.M. Mahalingam at Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore.